# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# Tamil University, Thanjavur

# முனைவர் பட்ட விதிமுறைகள் 2022

## Ph.D. Regulations 2022

**கல்வி நிலை ஆய்வு இயக்ககம்**

**Directorate of Academic Research**

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**Tamil University**

**தஞ்சாவூர்**

**Thanjavur**

daretamiluniv@gmail.com

தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப் படிப்பு விதிமுறைகள் – 2022*

உள்ளடக்கம்


| வ. எண் | | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | இயல் –I | சட்டவிதிகள் | 4 |
| 2 | இயல் –II | முனைவர் பட்டப்படிப்பு - 2022 விதிமுறைகள் | 4 |
| 3 | 1.0 | முன்னுரை | 6 |
| 4 | 2.0 | தமிழ்ப் பல்கலைக்கழகம் அளிக்கும் முனைவர் பட்டப் படிப்புகள் & கல்வித்தகுதி | 6 |
| 5 | 3.0 | இனவாரிச் சுழற்சி ஒதுக்கீடு | 10 |
| 6 | 4.0 | கல்வித் தகுதி & வயது வரம்பு | 11 |
| 7 | 5.0 | முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் பட்டப்படிப்பு | 11 |
| 8 | 6.0 | தேர்வு செய்யும் முறை - நுழைவுத்தேர்வு | 15 |
| 9 | 7.0 | துறைசார் ஆய்வுக் குழு(DRC) | 18 |
| 10 | 8.0 | சேர்க்கை | 19 |
| 11 | 9.0 | கல்விக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் | 19 |
| 12 | 10.0 | ஆய்வு நெறியாளர் ஏற்பளிப்பு | 20 |
| 13 | 11.0 | ஆய்வு மாணவர் எண்ணிக்கை வரையறை | 22 |
| 14 | 12.0 | முனைவர் பட்டப் படிப்பின் காலம் | 23 |
| 15 | 13.0 | கால நீட்டிப்பு வழிமுறைகள் | 24 |
| 16 | 14.0 | ஆய்வு ஆலோசனைக் குழு (RAC) | 25 |
| 17 | 15.0 | பாட/ பயிற்சிப் பணிப் பாடத்திட்டம் அமைப்பு (Course Work) | 27 |
| 18 | 16.0 | பல்கலைக்கழகத்திற்கு வெளியே ஆய்வுச் செய்தல் | 29 |
| 19 | 17.0 | ஆய்வு மாணவரின் முன்னேற்றத்தை மேற்பார்வையிடல், கண்காணித்தல் | 30 |
| 20 | 18.0 | ஆய்வுச் சுருக்கம் சமர்ப்பித்தல் | 31 |
| 21 | 19.0 | ஆய்வேடு சமர்ப்பித்தல் | 34 |
| 22 | 20.0 | ஆய்வேடு மதிப்பீடு | 36 |
| 23 | 21.0 | பொது வாய்மொழித் தேர்வு | 39 |
| 24 | 22.0 | முனைவர் பட்டம் வழங்குதல் | 41 |
| 25 | 23.0 | முனைவர் பட்டப் பதிவு நீக்கம் | 41 |
| 26 | 24.0 | ஆய்வேடு நூலாக்கம் | 42 |
| 27 | 25.0 | கருத்துக் களவுச் சட்டம் | 42 |
| 28 | 26.0 | ஆய்வேட்டின் நகல்களை நூலகத்தில் காத்தல் | 43 |

| | | | |
|---|---|---|---|
| 29 | 27.0 | ஆய்வு நெறிமுறைகள் தொடர்பான விதிமுறைகள் | 43 |
| 30 | 28.0 | ஆய்வுநெறிமுறைகள் | 45 |
| 31 | 29.0 | ஆய்வுநடத்தைத் தவறுகள் | 47 |
| 32 | 30.0 | ஆய்வுநடத்தைத் தவறுகள் பற்றிய விசாரணை | 48 |
| 33 | இயல் - III | விதிமுறைகள் மாற்றம் செய்தல் | 49 |
| 34 | 31.0 | சட்ட விதிகளில் திருத்தங்கள் | 49 |
| 35 | 32.0 | சட்ட விதிகளின் பொருள் விளக்கம் | 49 |


*இவ்விதிமுறைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி மாற்றுவதற்கான அதிகாரம் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு.

## தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப் படிப்பு விதிமுறைகள் 2022

## இயல் - I

### சட்ட விதிகள்:

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைச்சட்டத்தின் முனைவர்பட்ட பிரிவு விதிகளின்படியும், பல்கலைக்கழக நல்கைக்குழுவின் 2016 & 2018 விதிமுறைகளின்படியும், தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு ஒப்புதலுடன் "முனைவர் பட்டம்" வழங்கும் இந்த ஆணை, "தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப்படிப்பு விதிமுறைகள் 2022", உருவாக்கப்பட்டுள்ளது.

## இயல் - II

முனைவர் பட்டப் படிப்பு விதிமுறைகளில், சூழல் மாறாத நிலையில், நடைமுறைகள், வரையறைகள் மற்றும் பெயரிடல் பின்வருமாறு அமையும்.

1. "பல்கலைக்கழகம்" என்பது தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் - 613 010, தமிழ்நாடு என்பதனைக் குறிக்கும்.
2. "ஆய்வு இயக்ககம்" என்பது தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்விநிலை ஆய்வு இயக்ககத்தினைக் குறிக்கும்.
3. "துறை ஆய்வுக் குழு" (DRC – Department Research Committee) என்பது தமிழ்ப் பல்கலைக்கழகத் துறையின் ஆய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வகையில் முறையாக உருவாக்கப்பட்ட குழுவைக் குறிக்கும்.
4. முனைவர் பட்டப் படிப்பு என்பது கலை, சுவடி, மொழி, வளர்தமிழ், அறிவியல் எனும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஐந்து புலங்களில் அடங்கிய துறைகளின் பாடங்களில் முனைவர் பட்டம் வழங்குவதற்கு வழிவகுக்கும்.
5. "நெறியாளர்" அல்லது "ஆய்வு நெறியாளர்" என்பது தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்ட, ஆய்வாளர்களுக்கு வழிகாட்டும் பல்கலைக்கழகப் பேராசிரியர், இணைப்பேராசிரியர், உதவிப்பேராசிரியர் ஆகியோரைக் குறிக்கும்.

6. “இணை நெறியாளர்” என்பது ஒன்றுக்கும் மேற்பட்ட வல்லுநர்கள் தேவைப்படும் பல்துறை ஆய்வில் ஈடுபடும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களிலும், பிற நிறுவனங்களில் பணிபுரியும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்ட இணை நெறியாளரைக் குறிக்கும்.
7. “துறைத்தலைவர்” என்பது ஆய்வு நெறியாளர் பணிபுரியும் துறையின் தலைவர் என்று பொருள்படும்.
8. முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கான “துறை அல்லது ஆய்வு மையம்” என்பது நெறியாளர் பணிபுரியும் துறை அல்லது ஆய்வு மையமாகும்.
9. “ஆய்வு ஆலோசனைக் குழு” (RAC - Research Advisory Committee) என்பது ஒவ்வொரு முனைவர்பட்ட ஆய்வாளரின் ஆய்வுப் பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, துணைவேந்தரால் அமைக்கப்பட்ட குழுவாகும்.
10. “முனைவர் பட்ட மாணவர்/முனைவர் பட்ட ஆய்வாளர்” என்பது பல்கலைக்கழகத்தால் முழு நேர, பகுதிநேர (உள்நிலை) மற்றும் பகுதிநேர (வெளிநிலை) முறையில் முனைவர் பட்டம் பெற ஆய்வு மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்தாரரையும் குறிக்கும்.
11. பாடப் பயிற்சிப்பணி –”Course/Training Work” என்பது தமிழ்ப் பல்கலைக்கழகமும், ஆய்வு ஆலோசனைக் குழுவும் ஆய்வாளருக்குப் பரிந்துரை செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய எழுத்துத் தேர்வு, செயல்முறைப் பாடங்கள் அல்லது எழுத்துத் தேர்வுடன் செய்ய வேண்டிய பிற நடைமுறைகளைக் குறிக்கும்.
12. “தரப்புள்ளி” Grade Point பாடங்களின் மொத்த மதிப்பெண்களைப் பத்தால் வகுத்துப் பின் இரு தசம புள்ளிகளாக்குவதாகும்.
13. “Credit Points” - “கற்றல் அளவுப் புள்ளி” என்பது தரப்புள்ளியையும் தொடர்புடைய “கற்றல் அளவு மணி நேரத்தையும்” பெருக்குவதைக் குறிக்கும்.
14. தரப்புள்ளி சராசரி என்பது ஒரு பருவத்தில் பெற்ற மொத்த தரப் புள்ளிகளை அந்தப் பருவத்திற்கான கற்றல் அளவு மணிநேரத்தால் வகுத்தால் கிடைக்கும் சராசரியைக் குறிக்கும்.

15. Publication ("வெளியீடு") என்பது முனைவர் பட்ட ஆய்வாளர் அந்தந்தத் துறைகளில், தனது ஆய்வுக் கண்டுபிடிப்புகளைப், புதிய கருத்துகளைப், புதுமையான வளர்ச்சி முறைகளை முழு நீள ஆய்வுக் கட்டுரைகளாகப் புள்ளி விவரங்கள், அட்டவணைகள் மற்றும் குறிப்புகளுடன் அறிக்கையாக வெளியிடுவதனைக் குறிக்கும்.

## 1.0 முன்னுரை

முனைவர் பட்டம் என்பது நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆழ்ந்த ஆய்வு மற்றும் விரிவான அறிவுசார்ந்த தேடல் முயற்சி தேவைப்படும் மிக உயரிய கல்விப் பட்டமாகும். இந்த விதிமுறைகளின்படி ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பாடம், துறை அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட துறைகள் சார்ந்த பொருண்மையில் உண்மையான, வேறு பட்டத்திற்கு அளிக்கப் பெறாத, புலத்தின் அறிவுசார் ஆய்வேடு தேர்வுக் குழுவினால் ஏற்பளிக்கப்பட்டு, தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவின் ஒப்புதலுடன் அளிக்கப்பெறும் பட்டமே முனைவர் பட்டம் ஆகும். தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்ட விதிமுறைகள் 2022, முனைவர் பட்டப் படிப்பிற்கான பதிவு முதல், முனைவர் பட்டம் வழங்குதல் வரை பல்கலைக்கழக நல்கைக்குழுவின் (UGC) – குறைந்த அளவு தகுதிகள் மற்றும் பட்டம் பெறுவதற்கான நடைமுறைகள், மே 2016, மற்றும் 2018-இல் செய்யப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கியதாகும்.

## புதிய முனைவர் பட்ட விதி முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் காலம்

இந்த விதிமுறை 2022 ஜூலையிலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப் படிப்பிற்குப் பதிவு செய்யும் மாணவர்களுக்குப் பொருந்தும். சனவரி 2021 பருவம் முதல் முனைவர் பட்டப் பதிவு மேற்கொண்டவர்களுக்கு முனைவர் பட்ட விதிமுறை 2020 பொருந்தும். 2020 வரை பதிவு செய்த பிற மாணவர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 2020ஆம் ஆண்டிற்கு முன்னதான முனைவர் பட்ட விதிமுறைகளும் பொருந்தும். முனைவர் பட்டத்திற்கு அவ்வப்போது தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளிடப்படும் விதிமுறைகளும் பொருந்தும்.

## 2.0. தமிழ்ப் பல்கலைக்கழகம் அளிக்கும் முனைவர் பட்டப் படிப்புகள் & கல்வித் தகுதிகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 26 துறைகளிலும், ஏற்பளிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்களிலும் முனைவர் பட்டப் படிப்பு அளிக்கப்படுகிறது. இங்கு அளிக்கப்படும் முனைவர் பட்டப் பாடங்களின் விவரம் பின்வருமாறு:

| **துறையின் பெயர்**<br><br>**1** | **முனைவர் பட்டப் படிப்பு**<br><br>**2** | **TURCET நுழைவுத்தேர்வுக்கான பாடப் பிரிவு** | **முனைவர் பட்டப் படிப்பில் சேர்வதற்கான விண்ணப்பத்தாரரின் முதுகலை/முதுஅறிவியல் பாடத் தகுதிகள்**<br>**3** |
|---|---|---|---|
| சிற்பத்துறை | 1.வரலாறு - HISTORY<br>2.வரலாறு -நுண்கலை<br>History - Fine Arts<br>3. கலைவரலாறு - Art History<br>4.Fine Arts - நுண்கலை<br>5.HISTORY-Sculpture<br>வரலாறு - சிற்பம் | வரலாறு<br>History group | முதுகலை வரலாறு – M.A. History<br>முதுகலை நுண்கலை<br>M.A. Fine Arts (Sculpture and Paintings)<br>மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| இசைத்துறை | 1.இசை - Music<br>2.பரதநாட்டியம் - Bharathanatiyam | 1.இசை - Music<br>2.பரதநாட்டியம் - Bharathanatiyam | முதுகலை இசை<br>M.A -M.F.A.(Music), M.P.A(Music)<br>முதுகலை பரதநாட்டியம்<br>M.A., M.F.A. Bharathanatiyam, M.P.A. (Bharathanatiyam) மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| நாடகத்துறை | நாடகம் | நாடகம் | முதுகலை நாடகம் நுண்கலை , மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| ஓலைச் சுவடித்துறை | 1.தமிழ் - Tamil<br>2.தமிழ் - சுவடியியல்<br>Tamil -Manuscriptology | தமிழ் - | முதுகலைத் தமிழ் – M.A. Tamil<br>மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 1.வரலாறு - History<br>2.வரலாறு - சுவடியியல்<br>History - Manuscriptology | History | முதுகலை வரலாறு –<br>M.A. History மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| அரிய கையெழுத்துச் சுவடித்துறை | 1.தமிழ் - Tamil | Tamil | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை | 1.**வரலாறு** - History<br>2.**வரலாறு - கல்வெட்டியல்**<br>History-Epigraphy | History group | முதுகலை வரலாறு –<br>M.A History<br>முதுகலை வரலாறு மற்றும் தொல்லியல் -<br>M.A. History & Archaeology<br>முதுகலைப் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் –<br>M.A. Ancient History & Archaeology மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை | 1.தொல்லியல் - Archaeology<br>2.வரலாறு – History<br>3. கடல்சார் தொல்லியல் Marine Archaeology | History group | முதுகலை தொல்லியல்<br>M.A. Archaeology<br>முதுகலை வரலாறு - M.A. History<br>முதுகலை வரலாறு மற்றும் தொல்லியல் –<br>M.A. History&Archaeology<br>மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| மொழிபெயர்ப்புத் துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 2.மொழிபெயர்ப்பியல் – Translation | மொழிபெயர்ப்பியல் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>முதுகலை ஆங்கிலம் –<br>M.A. English மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 3.ஆங்கிலம் - English | ஆங்கிலம் | முதுகலை ஆங்கிலம் –<br>M.A. English மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 4. மொழியியல் - Linguistics | மொழியியல் | முதுகலை மொழியியல்<br>M.A. Linguistics<br>முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>முதுகலை ஆங்கிலம் –<br>M.A. English மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| அகராதியியல் துறை | 1.தமிழ் - Tamil<br>2.அகராதியியல் – Lexicography<br>3. மொழியியல் - Linguistics | தமிழ், மொழியியல் | முதுகலைத் தமிழ், முதுகலை மொழியியல் - M.A.Tamil,<br>M.A. Linguistics மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| சமூகஅறிவியல் துறை | 1.சமூகப்பணி - Social Work | Social Work | முதுநிலைச் சமூகப்பணி - M.A.Social Work தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| அறிவியல்தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை | 1.கல்வியியல் - Education | கல்வியியல் | கல்வியியல் நிறைஞர் –<br>M.Ed. Education மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| இலக்கியத் துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் - | முதுகலைத் தமிழ் மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| மொழியியல் துறை | 1.மொழியியல் - Linguistics<br>2. ஆங்கிலம் – English ? | மொழியியல் | முதுகலை மொழியியல்,<br>M.A.Linguistics<br>முதுகலை ஆங்கிலம்-M .A. English<br>முதுகலைத் தமிழ் - M .A. Tamil<br>மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 2.ஆங்கிலம் - English | English | முதுகலை ஆங்கிலம் - M.A. English மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| மெய்யியல் துறை | 1.மெய்யியல் - Philosophy<br>2.கோயில் நிருவாகம் - Temple Management<br>3. யோகா - Yoga<br>4.பண்பாடு – Culture<br>5. சமயம் – Religion | Philosophy group | முதுகலை மெய்யியல், இந்தியப் பண்பாடு, யோகா, சமயம் சார்ந்த படிப்புகள்<br>PG in Philosophy, Indian Culture, Yoga & Religious Studies மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| பழங்குடி மக்கள் ஆய்வு மையம் | 1.மொழியியல் - Linguistics<br>2.மானுடவியல் – Anthropology | 1.மொழியியல் - Linguistics<br>2.மானுடவியல் – Anthropology | முதுகலை மொழியியல், முதுகலை மானுடவியல்<br>M.A Linguistics,<br>M.A Anthropology மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| நாட்டுப்புறவியல் துறை | 1.தமிழ் - Tamil | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 2.நாட்டுப்புறவியல் – Folklore | 2.நாட்டுப்புறவியல் – Folklore | முதுகலை நாட்டுப்புறவியல் - MA Folklore மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி | 1.தமிழ் - Tamil | தமிழ் – Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 1.ஒப்பிலக்கியம் - Comparative Literature | ஒப்பிலக்கியம் - Comparative Literature | முதுகலைத் தமிழ், ஏதாவது ஒரு இந்திய மொழியில் முதுகலைப் பட்டம்<br>MA Tamil, PG in any Indian Language மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| சித்தமருத்துவத் துறை | 1.சித்தமருத்துவம் - Siddha Medicine<br>2.உயிர்த் தொழில்நுட்பவியல் Biotechnology<br>3.உயிர்வேதியியல் - Biochemistry<br>4.நுண்ணுயிரியல் - Microbiology<br>5.தாவரவியல் - Botany<br>6.வேதியியல் - Chemistry<br>7.மருத்துவத்தாவரவியல் Medicinal Botany<br>8.மருந்துஅறிவியல் Pharmaceutical Sciences | Siddha Group | எம்.டி (சித்தா), சித்தமருத்துவம், மருந்து அறிவியல்<br>மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் M.D. Siddha, Masters of Pharmacheutical Sciences, and related and equivalent subjects |
| தொழில் மற்றும் நிலஅறிவியல் துறை | 1.நிலத்தியல் - Geology<br>2.பயன்பாட்டு நிலத்தியல் - Applied Geology<br>3. நிலஅறிவியல் - Earth Science<br>4.தொலையுணர்வியல் - Remote Sensing<br>5.புவியியல் - Geography<br>6.புவிசார்தகவலியல் – Geoinformatics | Earth Sciences Group | முது அறிவியல் – நிலத்தியல் ,<br>மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் PG in Geology, Earth Sciences, and related and equivalent subjects |
| தொல்லறிவியல் துறை | 1.Botany - தாவரவியல்<br>2. உயிர்த் தொழில்நுட்பவியல் - Biotechnology<br>3.பட்டு வளர்ப்பு - Sericulture<br>4.வனவியல் – Forestry | Botany Group<br>NO Vacany Currently | முது அறிவியல் - தாவரவியல், தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள்<br>PG in Botany, and related and equivalent subjects |
| | 1. கணிதம் - Mathematics | கணிதம் - Mathematics | முது அறிவியல் கணிதம் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள் - PG in Mathematics |

| | | | |
|---|---|---|---|
| கட்டடக்கலைத் துறை | கட்டடக்கலை | - | - |
| கணிப்பொறி அறிவியல்துறை | 1.கணிப்பொறிஅறிவியல் Computer Science | கணிப்பொறிஅறிவிய ல் Computer Science | M.Sc., Computer Science / Information Technology / M.C.A முதுநிலைக் கணிப்பொறி அறிவியல்தகவல் , முதுநிலைக் கணினிப் ,தொழில்நுட்பவியல் பயன்பாட்டியல் |
| சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை | 1.சுற்றுச்சூழல்அறிவியல் Environmental Science<br>2.சுற்றுச்சூழல்- உயிர்த் தொழில்நுட்பவியல் Environmental Biotechnology<br>3.சுற்றுச்சூழல் நுண்ணுயிரியல் Environmental Microbiology<br>4.நுண்ணுயிரியல் - Microbiology<br>5.உயிர்த் தொழில்நுட்பவியல் - Bio-technology<br>6. சுற்றுச்சூழல் மேலாண்மை Environmental Management | Environmental Science Group | முதுநிலைச் சுற்றுச்சூழல் அறிவியல்உயிர் , அறிவியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள் PG in Environmental Sciences, related and equivalent subjects |
| நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை | 1.நூலகம் மற்றும் தகவல் அறிவியல் Library and information Science | நூலகம் மற்றும் தகவல் அறிவியல் | முதுநிலை நூலகம் மற்றும் தகவல் அறிவியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள்<br><br>PG in Library and information Science and related and equivalent subjects |
| **உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை** | 1.தமிழ் – Tamil | தமிழ் – Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil |
| | 2. மொழியியல் - Linguistics | 2. மொழியியல் - Linguistics | முதுகலைத் தமிழ், முதுகலை மொழியியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள் MA Tamil, M.A. Linguistics and related and equivalent subjects |
| | 3. நாட்டுப்புறவியல் – Folklore | 3. நாட்டுப்புறவியல் – Folklore | முதுகலை நாட்டுப்புறவியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள் M.A. Folklore and related and equivalent subjects |
| **புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்** | - | | - |

## 3.0. இனவாரி சுழற்சி ஒதுக்கீடு

முனைவர் பட்ட இட ஒதுக்கீடு தமிழக அரசின் இட ஒதுக்கீட்டு முறையின்படி நடைபெறும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2020-21-ல் பின்பற்றப்பட்ட 200 புள்ளி இனவாரி சுழற்சி முறையின் (Roster) தொடர்ச்சியாக முனைவர் பட்ட ஒழிவிடங்கள் ஒதுக்கப்படும்.

## 4.0. முனைவர் பட்டப் படிப்பிற்கான கல்வித்தகுதி & வயது வரம்பு

4.1. உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழுவின் விதிகளின்படி, ஏற்பளிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3+2 அல்லது 10+2+5 அல்லது அதற்கு இணையான கல்விப் படிநிலைகளில் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

4.2. முதுநிலையில் 55% (விழுக்காடு) மதிப்பெண்கள் அல்லது அதற்கு இணையான தரம் (CGPA Grade) பெற்றிருத்தல் வேண்டும். பட்டியல் SC/SCA/ பழங்குடி இனத்தவர் ST/ பிற்படுத்தப்பட்டோர் BC / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் MBC/DNT/DA மாற்றுத் திறனாளிகள் ஆகிய பிரிவினர்கள் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிமுறைகளின்படி முதுநிலைப் பட்டப்படிப்பில் குறைந்தது 50% (விழுக்காடு) மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும் (சான்றொப்பம் பெற்ற உரிய சாதிச் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்).

4.3. சித்த மருத்துவம் போன்ற படிப்புகளில் ஏற்பளிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+5+3 கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

4.4. முனைவர் பட்டப் படிப்பில் சேருவதற்கான உயரளவு வயது வரம்பு 60 ஆகும். இது சேர்க்கைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாளிலில் கணக்கிடப்படும்.

## 5.0 முழு நேர முனைவர் பட்டப்படிப்பு

5.1.1 . முழுநேர முனைவர் பட்டப்படிப்பு ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வைப் பல்கலைக்கழக வளாகத்தில் அல்லது ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களில் மட்டுமே மேற்கொள்ள இயலும். முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்கள் நாள்தோறும் தங்கள் துறைகளில் வருகையைப் பதிவு செய்து, வருகைப் பதிவேடுகளில் கையொப்பமிட வேண்டியது கட்டாயமாகும். ஆய்வு நெறியாளர் ஆய்வாளர்களைக் கள ஆய்விற்குச் செல்லுமாறு பணிக்கலாம். அவ்வாறு செல்லும் ஆய்வாளர்கள் ஆய்வுப்பணியில் இருப்பவர்களாகக் கருதப்படுவர்.

5.1.2. பணியிலிருக்கும் போது முழுநேர ஆய்வுப் படிப்பு மேற்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்கள், அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தால் ஏற்பளிக்கப்பட்டு, ஆய்வுப் படிப்பிற்குத் தேவைப்படும் குறைந்த அளவு காலத்திற்கு விடுமுறையைப் பெற வேண்டும்.

மேலும், அவர்கள் தங்கள் பணியிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

5.1.3. தேசிய அளவிலான தகுதித் தேர்வு UGC NET–JRF, SET, GATE) அல்லது வேறு ஏற்பளிக்கப்பட்ட அமைப்புகளின் கீழ் தேர்வு எழுதி தேர்வு பெற்றவர்கள் முனைவர் பட்ட விதிமுறைகளின்படித் தகுதி பெற்றிருக்கும் நிலையில் முழு நேரப் படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.

## 5.1.4. முனைவர் பட்டப்படிப்பிற்கு வெளிநாட்டு மாணவர் சேர்க்கை:

கல்வி மற்றும் பண்பாட்டு அமைச்சரகம் அல்லது வெளியுறவுத் துறை அமைச்சகம் மூலம் பல்வேறு உதவித் தொகை திட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் வெளிநாட்டு மாணவர்கள் நேரடியாக முழு நேர ஆய்வாளராகச் சேர்க்கப்படுவர். அந்தந்த அமைச்சகத்தின் பரிந்துரை அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் முழு நேர சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் மற்ற வெளிநாட்டு மாணவர்கள் இந்திய தூதரகத்தின் ஆய்வாளர் விசா மற்றும் “தடையின்மைச் சான்றிதழ் (NOC)”, இந்திய அரசின் கல்வி அமைச்சகம் மற்றும் வெளிநாட்டில் உள்ள இந்திய வெளியுறவு அமைச்சகத் தூதரகத்தின் அனுமதிக்குப் பிறகு சேர்க்கப்படுவர். மேலும் அவர்கள் இந்தியாவில் தங்குவதற்கும் முனைவர் பட்டப் படிப்பைத் தொடர்வதற்குமான 3 ஆண்டுகளுக்கான நிதித் திறனுக்கான சான்றை அளிக்க வேண்டும்.

## 5.2. பகுதி நேரம் (Internal Part time)

5.2.1 தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிரந்தரப் பணியில் உள்ளவர்கள், முனைவர் பட்ட ஆய்வுப் படிப்பிற்கு விண்ணப்பிக்கும் ஆய்வு மாணவர்கள் இந்த வகைப்படுவர்.

5.2.2 உதவிப்பேராசிரியர்களாக ஆய்வியல் நிறைஞர் தகுதியுடன் இருப்பவர்கள் பதவியில் சேர்ந்த நாளிலிருந்து ஓராண்டிற்குப் பிறகு (ஆண்டு முடிந்த அடுத்த நாள்) முனைவர் பட்டப் படிப்பிற்குப் பதிவுச் செய்ய அனுமதிக்கப்படுவர்.

5.2.3. ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பெறாத உதவிப் பேராசிரியர்கள் பதவியில் சேர்ந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, பகுதி (4.0) உள்ள கல்வித் தகுதி நிபந்தனைகளை நிறைவு செய்திருந்தால் முனைவர் பட்டப் படிப்பிற்குப் பதிவு செய்யலாம்.

5.2.4. நிரந்தரப் பணியில் உள்ள ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் (Non teaching staff) முனைவர் பட்டப் படிப்பிற்குப் பதிவு செய்வதற்கான கல்வித் தகுதி நிபந்தனைகளை

(பகுதி 4.0 உள்ளவை) நிறைவு செய்திருந்தால் பணியில் சேர்ந்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு (முடிந்த நாளுக்கு பின்னர்) பகுதி நேர முனைவர் பட்டப் படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம். மேலும் அவர்கள் அண்மைக்காலத்தில் தொடர்புடைய பாடத்தில் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டிருக்க வேண்டும்.

5.2.5. முனைவர் பட்டப் படிப்பிற்குத் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியிலிருப்பவர்கள் அன்றாடம் கற்பித்தல், பிற பல்கலைக்கழகப் பணிகள் எந்த வகையிலும் தடைபடாத வகையில் முனைவர் பட்டப் படிப்பைத் தொடருவது அவசியம். முனைவர் பட்டப் படிப்பிற்கு அவர்கள் தேர்வு செய்யப்படுவது துணைவேந்தரின் இறுதி முடிவிற்கு உட்பட்டது. மேலும் முனைவர் பட்டம் பெற்றவர்கள் (ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்) பட்டத்தின் அடிப்படையில் பதவி உயர்வு, பணிமாற்றம் கோர இயலாது.

5.2.6. தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நடத்திவரும் திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்கள் உரிய தகுதிகள் பெற்றிருப்பின் அவர்கள் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்விற்கு விண்ணப்பிக்கலாம். இவர்களின் ஆய்வுத் தலைப்பு ஆய்வுத்திட்டம் தொடர்புடையதாக இருப்பின் இவர்கள் முழு நேர ஆய்விற்கு விண்ணப்பிக்கலாம். இவர்களுடைய ஆய்வுத் தலைப்பு ஆய்வுத் திட்டத் தலைப்புடன் தொடர்பு இல்லை எனில் பகுதி நேர ஆய்விற்கு விண்ணப்பிக்கலாம். இந்த வகையிற்படும் பகுதி நேர ஆய்வாளர்களுக்குப் பிற பணி அனுபவம் தேவை இல்லை. இவர்கள் உரிய வழியாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு முன்கூட்டியே விண்ணப்பித்து தடையின்மைச் சான்றிதழைப் (NOC) பெற்று விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

5.2.7. முனைவர் பட்டப் படிப்பிற்கு விண்ணப்பிக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியாளர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு முன்கூட்டியே விண்ணப்பித்து தடையின்மைச் சான்றிதழைப் (NOC) பெற்று விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

## 5.3. பகுதி நேரம் (Part – time External)

5.3.1. பகுதிநேர புறநிலை விண்ணப்பதாரர்களை அனுமதிப்பதற்கான முழு உரிமை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டது.

5.3.2. இந்திய அரசுப் பணி, தொழில்துறை, தமிழ்நாடு அரசுப் பணி, அரசு, தனியார் கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றில் குறைந்த அளவு இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரியும் பேராசிரியர்கள்/ஆசிரியர்கள், திட்டப் பணியாளர்கள், திட்டத் தகைமையாளர்கள் (Project Fellows) பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வுப் பதிவிற்குத் தகுதிபெற்றவர்களாவர்.

தடையின்மைச் சான்றிதழைப் (NOC) பெற்று விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

5.3.2. பகுதிநேர முனைவர் பட்ட விண்ணப்பதாரர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அல்லது ஏற்பளிக்கப்பட்ட ஆராய்ச்சி மையங்களில் நெறியாளரின் நெறியாள்கையின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

5.3.3. பகுதி நேர விண்ணப்பதாரர்கள் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான வசதிகளைக் கொண்ட ஏற்பளிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் உதவிப் பேராசிரியர்கள்/ இணைப் பேராசிரியர்கள்/ பேராசிரியர்களாக இருத்தல் அவசியம். மேலும் அவர்கள் முனைவர் பட்டப்படிப்பிற்கான குறைந்த அளவுத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

5.3.4. தமிழ்ப் பல்கலைக்கழகம், பிற ஏற்பளிக்கப்பெற்ற நூலகங்களில் பணிபுரியும் தகுதி நிபந்தனைகளை நிறைவு செய்தவர்கள் தகுந்த பல்கலைக்கழக நெறியாளரின் கீழ் முனைவர் பட்டப் படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம். இதற்கு இணை நெறியாளர் தேவை இல்லை. விண்ணப்பதாரர்கள் வழக்கமான முனைவர் பட்டச் சேர்க்கை முறைக்கு உட்படுத்தப்படுவர்.

5.3.5. ஆய்வு மற்றும் வளர்ச்சி துறைகளைக் கொண்ட தனியார் அல்லது அரசு நிறுவனங்களில் உள்ள ஆராய்ச்சி விஞ்ஞானிகள் அல்லது அதற்கு இணையான ஆய்வுப் பணியாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் பகுதி நேர முனைவர் பட்டப்படிப்பிற்கு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஏற்பளிக்கப்பட்ட ஆய்வு நெறியாளரின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

5.3.6. கல்வித் தகுதிகள் அனைத்தும் உடைய விண்ணப்பதாரர்கள் தங்களது பாடத்திற்கான துறைகள் அல்லது தகுதிபெற்ற நெறியாளர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இல்லாத நிலையில், ஏற்பளிக்கப்பட்ட இணை நெறியாளரைப் பெற்றிருக்க வேண்டும். இணை ஆய்வு நெறியாளர் அதே நகரம் / ஊர் அல்லது அருகிலுள்ள பகுதியில் உள்ள ஏற்பளிக்கப்பட்ட ஆய்வு நிறுவனத்தில் பணியில் இருக்க வேண்டும்.

5.3.7. இணை நெறியாளர், தேவையான தகுதிகளைப் பெற்றிருப்பின் இணை நெறியாளராகச் செயல்பட ஏற்பளிப்பு பெற தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். பொதுவாக ஆய்வுக்கான வசதிகள், புறநிலை பகுதி நேர விண்ணப்பதாரர் பணிபுரியும் இடத்தில் இருக்க வேண்டும். அத்தகைய வசதிகள் இல்லாதபோது, இணை நெறியாளர் பணிபுரியும் இடத்தில் உள்ள ஆய்வு வசதிகள் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறவேண்டும். மேலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அந்தந்தத் துறைகளில் உள்ள வசதிகளை ஆய்வாளர்கள் பயன்படுத்திக்கொள்ள அனுமதி உண்டு.

5.3.8. பகுதி நேர புறநிலை முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒட்டுமொத்தமாக 30 நாள்கள் முனைவர் பட்டப் பதிவு செய்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துறைகளுக்கு/மையங்களுக்குக் கண்டிப்பாக வருகைத்தர வேண்டும்.

5.3.9. முனைவர் பட்ட விண்ணப்பத்துடன், பின்வரும் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

- பணியிடத்திலிருந்து தடையில்லாச் சான்றிதழ் (பகுதி நேரம்)
- இணை ஆய்வு நெறியாளரிடமிருந்து ஏற்புக் கடிதம்.

## 5.4. நேரநிலை மாற்றம்

முனைவர் பட்ட ஆய்வாளர்கள் முழுநேர முனைவர் பட்டப் படிப்பில் இருந்து பகுதி நேரமாக மாறவும், பகுதிநேர முனைவர் பட்டப் படிப்பிலிருந்து முழுநேரமாக மாறவும் தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறையில் அனுமதி உண்டு. இதற்குப், படிக்குமிடம் பொருத்தமானதாகவும், வருகைப் பதிவு நிலையும் போதுமானதாக இருக்க வேண்டும். முனைவர் பட்டப்படிப்புத் தொடர்பான ஆவணங்களை, ஆய்வு நெறியாளர், துறைத் தலைவர், புலத்தலைவர் ஆகியோரின் பரிந்துரையின்பேரில் ஆய்வாளரின் எழுத்துப்பூர்வ கோரிக்கைக்கு உட்பட்டுத் துணைவேந்தர் மட்டுமே நிலை மாற்றத்தை உறுதி செய்ய அதிகாரம் படைத்தவர். மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட நிலைமாற்றம் (பொருத்தமானதாகப்பட்டால்) தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் மட்டுமே கருதப்படலாம். தற்காலிகப் பதிவு உறுதிப்படுத்தப்பட்ட ஆய்வாளர்கள் மட்டுமே இந்த நேரநிலை மாற்றத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

முழுநேரத்திலிருந்து பகுதிநேரமாகவோ, அல்லது பகுதி நேரத்திலிருந்து முழு நேரமாகவோ மாறினால் குறைந்த அளவுக் காலம் என்பது எது அதிகமோ அதனடிப்படையிலும், வருகைப்பதிவு, விகித அடிப்படையிலும் கணக்கிடப்படும்.

## 6.0. தேர்வு செய்யும் முறை - நுழைவுத்தேர்வு

6.1. பல்கலைக்கழகம் முனைவர் பட்டப்படிப்புச் சேர்க்கைக்கான அறிவிப்பை பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் சனவரி பருவம் மற்றும் சூலை பருவம் என இரண்டு பருவமாக வெளியிடப்படும். இந்த அறிவிப்புத் தொடர்புடைய ஒழிவிடங்கள் எண்ணிக்கை, துறை மற்றும் பிற விவரங்களுடன் வெளியிடப்படும்.

6.2. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில் முனைவர் பட்டப்படிப்பிற்குச் சேர விரும்புவோர் பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து, உரிய கட்டணத்தைச் செலுத்தி, இணையவழியில் சமர்ப்பிக்க வேண்டும். பதிவேற்றம்

செய்யப்பட்ட விண்ணப்பத்தின் PDF நகலை அச்சிட்டு அனைத்து இணைப்புகளுடன் கல்விநிலை ஆய்வு இயக்ககத்திற்கு உரிய சான்றுகளின் நகல்களுடன் இறுதி நாளுக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

6.3. முழுமையற்ற விண்ணப்பங்கள், சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்படாத மற்றும் தவறான தகவல்கள் உள்ள விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர்களுக்கு எந்தவித முன்அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

6.4. கல்விநிலை ஆய்வு இயக்ககம் (DARE) முனைவர் பட்டத்திற்குப் பெறப்பட்ட விண்ணப்பங்களை விதிமுறைகளின்படி சரிபார்த்து தகுதியானவர்களுக்கு மட்டுமே எழுத்துத் தேர்வை நடத்தும். இருப்பினும் மாணவர்கள் தாங்கள் தகுதியானவர்களா என்பதை அவர்கள் அந்த ஆண்டுக்கான தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்ட விதிமுறைகளைப் படித்து உறுதிசெய்துகொள்ளவேண்டும்.

6.5. முனைவர் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் ஆய்வு மாணவர்கள் நேர்காணலுக்குத் தகுதி பெற பல்கலைக்கழகத்தால் குறிப்பிடப்பட்ட எழுத்துத் தேர்வில் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண்களைப் பெற வேண்டும். சேர்க்கையின் போதோ, சேர்க்கைக்குப் பின்னரோ அவருக்கு உரிய தகுதி இல்லை என்பது கண்டறியப்பட்டால் அவரது சேர்க்கையை இரத்து செய்ய தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் உண்டு.

## நுழைவுத்தேர்வு

6.6.1 ஒவ்வொரு சேர்க்கைப் பருவத்திற்கும் TURCET நுழைவுத் தேர்வு நடத்தப்பெறும். 2022லிருந்து ஒரு முனைவர் பட்ட நுழைவுத்தேர்வின் ஏற்புத்தன்மை (Validity) அந்த சேர்க்கைப் பருவத்திற்கு மட்டுமே பொருந்தும். அடுத்த பருவச் சேர்க்கைக்குப் புதிய நுழைவுத் தேர்வு எழுதவேண்டும். . 2020-21க்கான TURCET நுழைவுத்தேர்வு எழுதியவர்கள் 2022 ஜூலை சேர்க்கைப் பருவம் வரை மட்டுமே சேர்க்கைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்களாவர். அதற்குப் பிறகு அவர்கள் TURCET நுழைவுத் தேர்வு எழுதவேண்டும் அல்லது UGC NET/SET/ தகுதி பெற்றிருக்கவேண்டும்.

**6.7** முதுநிலைப் பட்டப்படிப்பிற்கான பாடத்தர அளவில் 100 மதிப்பெண்களுக்கு நுழைவுத் தேர்வு (100 கொள்குறி வினாக்கள் MCQ) நடத்தப்பெறும். ஒவ்வொரு கேள்வியும் ஒரு மதிப்பெண் கொண்டதாக அமையும். 70 வினாக்கள் பாடம் தொடர்புடையவை, 20 ஆய்வு நெறிமுறைகள் தொடர்புடையவை, 10 ஆய்வுத் திறன் தொடர்புடையவை. தேர்வுக் காலம் 120 நிமிடங்கள். அயலக மாணவர்கள் நுழைவுத் தேர்வு எழுதவேண்டியதில்லை.

6.7.1 TURCET நுழைவுத் தேர்வில் ஆதிதிராவிட/பழங்குடியினர் SC/ST/SCA (35%) மிகவும் பிற்படுத்தப்பட்ட (MBC) வகுப்பினர் (40%) மற்றும் பிற்படுத்தப்பட்ட (BC), மாற்றுத்திறனாளிகள் (DA) வகுப்பினர் (45%) ஆகியோருக்கு மேற்குறிப்பிட்டப்படி தளர்வு வழங்கப்படும். பொதுப் பிரிவு மாணவர்கள் 50% மதிப்பெண் பெற வேண்டும்6.7 நுழைவுத் தேர்வில் தகுதிபெறத் தேவையான மதிப்பெண்

| | |
|---|---|
| ஆதிதிராவிட/ பழங்குடியினர் SC/ST | 35% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட (MBC) வகுப்பினர் | 40 % |
| பிற்படுத்தப்பட்ட (BC), மாற்றுத்திறனாளிகள் | 45 % |
| பொதுப்பிரிவினர் | 50% |

6.8. 2022ஆம் ஆண்டிலிருந்து முனைவர் பட்டச் சேர்க்கைத் தரவரிசைப் பட்டியல் பின்வருமாறு கணக்கிடப்பெறும். முதுகலை/முதுஅறிவியல் மதிப்பெண் (70%), நேர்காணல் (30%) ஆகிய இரண்டிற்குமான 100% மதிப்பெண்களில் அதிக அளவு மதிப்பெண் பெற்றவர்கள், தமிழக அரசின் இனவாரி சுழற்சி முறை இடஒதுக்கீட்டின்படியும், அந்தந்தப் பருவங்களில் ஒழிவிடங்களின் அடிப்படையிலும் சேர்க்கைக்குத் தகுதி பெற்றவராவர்.

6.9. ஏற்பளிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று UGC –NET/ JRF/ SET/ CSIR/ GATE தகுதி பெற்றவர்கள் மற்றும் ICCR நல்கை பெற்ற, பிற அயலக மாணவர்களுக்கு நுழைவுத்தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. முனைவர் பட்டச் சேர்க்கைக்கு நேர்காணலுக்கு வரவேண்டியது கட்டாயமாகும்.

6.10. ஏற்பளிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று UGC/JRF/CSIR/GATE நல்கைக்கான தேர்வில் தகுதி பெற்றவர்கள் மற்றும் ICCR/அயலக மாணவர்கள் ஓர் ஆண்டின் எந்த நேரத்திலும் இருக்கக்கூடிய ஒழிவிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

# 7.0 துறைசார் ஆய்வுக்குழு (DRC)

7.1. குழுவின் அமைப்பு:

துறைத்தலைவர் மற்றும் துறையில் பணிபுரியும் வழிகாட்டத் தகுதி பெற்ற கல்வியாளர்கள் இதன் உறுப்பினர்களாவர்

| பதவி | உறுப்பினர்கள் |
|---|---|
| துறைத்தலைவர் | குழு ஒருங்கிணைப்பாளர்(Co-Ordinator) துறைத்தலைவர் நெறியாளராகத் தகுதி பெறவில்லை எனில் நெறியாளர் தகுதி பெற்ற மூத்த ஆசிரியர் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார். |
| உறுப்பினர்கள் | துறையில் நெறியாளராகச் செயல்படும் அனைத்து ஆசிரியர்கள் |
| துணைவேந்தர் நியமனம்* | புலத்தலைவர் |

*புலத்தலைவர் அலுவல் அல்லது வேறு பணியின் காரணமாக இல்லாத நிலையில் துணைவேந்தர் வேறு ஒரு பேராசிரியரை நியமிக்கலாம்.

## 7.2. துறைசார் ஆய்வுக் குழுவின் செயல்பாடுகள்:

- முனைவர் பட்டப் படிப்பிற்கு விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்தல். சேர்க்கையின் போது ஒழிவிடங்கள் உள்ள நெறியாளர்கள் மட்டுமே DRC தேர்வுக் குழுவில் இடம் பெருவர்.
- முனைவர் பட்டப் படிப்பிற்குப் பதிவுச் செய்த ஆய்வாளர்களுக்கு ஆய்வு மேற்பார்வையாளர்களை ஒதுக்கீடு செய்தல்.
- துறையில் ஆய்வு வசதிகளை உருவாக்குதல்.
- முனைவர் பட்டப் பயிற்சிப் பணித்தேர்வுக்கான (தாள் 2 பாடம் தொடர்புடையது மற்றும்/அல்லது தாள் 3 ஆய்வேடு தொடர்புடையது) பாடத்திட்டத்தை உருவாக்குதல்.
- துறையில் வேறு ஏதேனும் ஆய்வு தொடர்பான சிக்கல் இருப்பின் அவற்றைச் சரிசெய்து ஒழுங்குபடுத்துதல்.

7.3. DRC, துறையில் பணிபுரிபவர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரிடையே ஏதேனும் முரண்பாடு இருந்தால் கல்விநிலை ஆய்வு இயக்ககத்தின் (DARE) இயக்குநர் கவனத்திற்கோ அல்லது துணைவேந்தரின் கவனத்திற்கோ கொண்டு வரலாம். துணைவேந்தரின் முடிவே இறுதியானது.

7.4. துறை ஆய்வுக்குழுவின் கூட்ட அறிக்கை புலத்தலைவர் பரிந்துரையுடன் துணைவேந்தரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட வேண்டும்.

## 8.0. சேர்க்கை

8.1. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வாளர்கள் முனைவர் பட்டச் சேர்க்கை அனுமதி வழங்கப்பட்டு அவரது முதுநிலைத் தகுதியின் அடிப்படையில், அந்தந்தத் துறையில் முனைவர் பட்டப்படிப்பிற்கு அனுமதிக்கப்படுவர். சேர்க்கை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நாளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட கல்விக்கட்டணத்தைச் செலுத்தி படிப்பில் சேர வேண்டும், தவறினால் ஆய்வாளர்கள் தங்களது இடத்தை இழக்க நேரிடும்.

8.2. முனைவர் பட்டப்படிப்பிற்கான தற்காலிகப் பதிவு ஆணை கட்டணம் செலுத்திய உடன், விண்ணப்பதாரர் அனுமதிக்கப்பட்ட ஜனவரி / ஜுலை பருவத்தில் வழங்கப்படும். கல்விக்கட்டணத்தைச் செலுத்திய நாள் சேர்க்கை நாளாகக் கருதப்படும்.

8.3 ஆய்வாளர், ஆய்வு நெறியாளர், இணை ஆய்வு நெறியாளர், ஆய்வு ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் மற்றும் தேர்வாளர்கள் ஒருவருக்கொருவர் உறவினர்களாக இருக்கக் கூடாது.

## 9.0 கல்விக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள்

9.1 முனைவர் பட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், சேர்க்கை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளுக்குள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தவறினால் அவர்களது சேர்க்கை இடத்தை இழக்க நேரிடும். கட்டண விவரங்கள் பல்கலைக்கழகத்தால் சேர்க்கைக் கையேட்டில் வெளியிடப்படும்.

9.2 முனைவர்பட்ட ஆய்வாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் கல்விக் கட்டணத்தை ஆய்வேட்டைச் சமர்ப்பிக்கும் வரை, அந்தந்தப் பருவத்தில் (சனவரி, சூலை மாதத்திற்குள்) செலுத்த வேண்டும். தாமதமாகச் செலுத்தப்படும் கல்விக் கட்டணத்திற்குப் பல்கலைக்கழக விதிமுறைகளின்படித் தண்டத்தொகை விதிக்கப்படும். ஆய்வு நெறியாளர்கள் அவர்களின் வழிகாட்டுதலின்கீழ் உள்ள ஆய்வாளர்கள் ஆண்டுதோறும் கட்டணம் செலுத்துவதைக் கண்காணித்து உறுதிப்படுத்த வேண்டும். தண்டத்தொகை விவரங்களைக் கட்டணம்

தொடர்பான பகுதியில் காண்க அல்லது கல்வி நிலை ஆய்வு இயக்ககத்தைத் தொடர்பு கொள்க.

9.3. ஆய்வாளர் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆண்டுக்கான கட்டணத்தைச் செலுத்தத் தவறினால், அவர்களது பதிவை இரத்து செய்ய பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் உள்ளது.

9.4. ஆண்டுக் கட்டணத்தைச் செலுத்தாமை ஆய்வாளர்களின் கடுமையான குறைபாடாகக் கருதப்படும். ஆய்வு மாணவர்களிடமிருந்து இதற்கான விளக்கம் கோரப்படும்.

## 10.0. ஆய்வு நெறியாளர்கள் ஏற்பளிப்பு

10.1. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏற்பளிக்கப்பட்ட நெறியாளராக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் பல்கலைக்கழக நல்கைக்குழுவால் ஏற்பளிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அவர் ஆய்வுத் தொடர்புடைய துறையில் முனைவர் பட்டம் (Ph.D.) பெற்றிருக்க வேண்டும்.

10.2. நிரந்தரப் பணியில் உள்ள முழுநேர ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் பணியில் சேர்ந்து ஓர் ஆண்டிற்குப் பிறகு நெறியாளராக செயல்பட விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர். அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியில் சேரும் போது வேறு பல்கலைக்கழகத்தில் நெறியாளராகச் செயல்பட அனுமதி பெற்றிருந்தால், அவர்கள் உடன் வழிகாட்ட அனுமதிக்கப்படலாம். இதற்கு அவர்கள் முறையாக விண்ணப்பிக்க வேண்டும்.

10.3 தகுதியான விண்ணப்பதாரர்கள் நெறியாளராக ஏற்பளிக்கப்பட, பரிந்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் வழி முறையாக விண்ணப்பிக்கலாம்.

10.4. விண்ணப்பதாரர் ஆய்வு நெறியாளராக ஏற்பளிக்கப்பட முனைவர்பட்டம் முடிந்தபிறகு பல்கலைக்கழக நல்கைக்குழுவின் பட்டியலிடப்பட்ட (UGC CARE LIST) அல்லது கல்வியாளர்களால் நுண்ணாய்வு செய்யப்பட்டு கட்டுரை வெளியிடும் (Peer reviewed) இதழ்களில் குறைந்த அளவு ஐந்து வெளியீடுகள் வெளியிட்டிருக்க வேண்டும் அல்லது இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் மூன்று நூல்கள் வெளியிட்டிருக்க வேண்டும். முனைவர் பட்டத்திற்குப் பின்னர் இரண்டு ஆய்வுக்கட்டுரைகள் அல்லது நூல்கள் தொடர்புடைய பாடத்தில் வெளியிட்டிருக்கவேண்டும்.

10.5 விண்ணப்பத்தாரர் முனைவர் பட்டம் பெறப்பட்ட துறையில் அவருக்கு நேரடியாக மேற்பார்வையாளராகச் செயல்பட அனுமதி வழங்கப்படும்.

10.6 துறையின் பாடம் தொடர்புடைய துறையிடைப் பாடங்களில் (Interdisciplinary areas) தகுதிபெற்ற இணை நெறியாளர் நியமிக்கப்பட்டு நெறியாளராகச் செயல்படலாம்.

10.7 ஆய்வுக்குழுவில் விவாதிக்கப்பட்ட பின்னர் மேற்பார்வையாளர் ஏற்பளிப்பு ஆணைகள், மேலே குறிப்பிட்டபடி உள்ள தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே அதிகாரப்பூர்வமாக அளிக்கப்பெறும்.

10.8. ஓர் ஆய்வு நெறியாளர், அவர் ஓய்வு பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை மட்டுமே முனைவர் பட்ட விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர். ஒரு நெறியாளர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே ஆய்வு நெறியாளராகத் தொடர்ந்து செயலாற்ற அனுமதிக்கப்படுவர். அவ்வாறு குறிப்பிட்ட காலத்தில் ஓர் ஆய்வாளர் தனது ஆய்வேட்டைச் சமர்ப்பிக்க முடியாவிட்டால், துறைத்தலைவர், வேறு ஓர் ஆய்வு நெறியாரை, ஆய்வு ஆலோசனைக் குழு (RAC) மற்றும் புலத்தலைவர் மற்றும் துறைத்தலைவர் ஆகியோருடன் கலந்தாலோசித்துப் பரிந்துரைப்பார்.

10.9 ஓர் ஆய்வு நெறியாளர் பொதுவாக அவரது முதன்மை, அடிப்படைப் பாடப்பிரிவில் /துறையில் மட்டுமே வழிகாட்டத் தகுதியுடையவர். இருப்பினும், அவர் அவரது துறைப் பாடத்தில் முனைவர் பட்டத் தகுதி பெறவில்லை எனில், தொடர்புடைய பாடத்தில் முனைவர் பட்டம்பெற்ற இணை நெறியாளருடன் மூன்று முனைவர் பட்ட ஆய்வேட்டைச் சமர்ப்பித்த பின்னர் துணைவேந்தரால் பரிந்துரைக்கப்பட்ட நிபுணரின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் அந்தப் பாடத்தில் வழிகாட்ட அனுமதிக்கப்படுவர்.

10.10 ஓர் ஆய்வு நெறியாளர் தனது இரத்தத் தொடர்புள்ள உறவினரை அவரது முனைவர் பட்ட மாணவராகப் பதிவு செய்ய அனுமதியில்லை.

10.11 துணைவேந்தர் ஓர் ஆய்வு நெறியாளரின் ஆய்வு மேற்பார்வைத் தகுதியைப் பின்வரும் அடிப்படையில் மொத்தமாகத் திரும்பப் பெற அதிகாரம் பெற்றவராவார்.

- தீயொழுக்கம், பாலியல் துன்புறுத்தல்
- எழுத்துக் கருத்துக் களவு
- தீங்கான மோசடியான கல்விச் செயல்பாடு
- பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடல்.
- குற்றச் செயல்பாடுகளில் ஈடுபடல்.

## 10.12 நெறியாளர் மாற்றம்

ஆய்வு நெறியாளரை மாற்றுவது வழக்கமாக அனுமதிக்கப்படாது. விதிவிலக்கான சூழல்களில், சரியான காரணங்கள் ஆய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்டால், அத்தகைய

மாற்றம் அனுமதிக்கப்படலாம். ஆய்வாளருக்கும் நெறியாளருக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு இருந்தால் துணைவேந்தரின் தலைமையிலான குழு மனுதாரரின் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

முனைவர் பட்ட ஆய்வாளர் முதலில் பதிவுசெய்த ஆய்வு நெறியாளரின் "தடையின்மைச் சான்றிதழ்" (NOC) மற்றும் தேர்வு செய்துள்ள புதிய ஆய்வு நெறியாளரிடமிருந்து பெறப்பட்ட "விருப்பச் சான்றிதழ்" (Acceptance Certificate) ஆகியவற்றை வழங்க வேண்டும்.

எனினும், துணைவேந்தருக்குத் துறை ஆய்வுக் குழுவின் (DRC) பரிந்துரையின் பேரில், புதிய ஆய்வு நெறியாளரை ஆய்வாளருக்கு நேரடியாக நியமிக்க உரிமை உண்டு, நெறியாளர் மாற்றம் தொடர்பான உத்தரவு கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும்.

10.12.1 ஆய்வு நெறியாளரின் மாற்றம் ஏற்பளிக்கப்படும் போது, ஆய்வாளர் குறைந்த அளவு ஆறு மாதம் புதிய ஆய்வு நெறியாளருடன் (தேவையான வருகைப் பதிவு இருந்தால்) ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்கும் முன் பணியாற்ற வேண்டியது கட்டாயமாகும். இருப்பினும் தகுதியின் அடிப்படையில் ஆய்வாளர் வேண்டுகோள் விடுத்தால், துணைவேந்தரின் முடிவே இறுதியானது.

10.12.2 ஓர் ஆண்டுக் காலத்திற்கு மேல் விடுப்புப் பெற விரும்பும் ஆய்வு நெறியாளர், அவரிடம் பதிவு செய்துள்ள ஆய்வாளர்களுக்கு நெறியாளராகச் செயல்பட முடியவில்லையெனில் வேறு இணை நெறியாளரை நியமிக்க வேண்டும்.

## 11.0 ஆய்வு மாணவர்களின் எண்ணிக்கை:

11.1 ஏற்பளிக்கப்பட்ட நெறியாளராக உள்ள ஒரு பேராசிரியர் ஒரு நேரத்தில் அதிக அளவாக 8 ஆய்வாளர்களுக்கு மட்டுமே வழிகாட்ட வேண்டும். நெறியாளராக ஏற்பளிக்கப்பட்ட இணைப்பேராசிரியர் ஒரு நேரத்தில் அதிக அளவாக 6 ஆய்வாளர்களுக்கு மட்டுமே வழிகாட்ட வேண்டும். ஏற்பளிக்கப்பட்ட நெறியாளராக உள்ள உதவிப்பேராசிரியர் ஒரு நேரத்தில் அதிக அளவாக 4 ஆய்வாளர்களுக்கு மட்டுமே வழிகாட்ட வேண்டும்.

11.2. இணை நெறியாளராகச் செயல்படும் மாணவர்களின் எண்ணிக்கை இந்தக் கணக்கில் அடங்காது. ஒரு நெறியாளர் பத்து ஆய்வாளருக்கு மேல் இணை நெறியாளராகச் செயல்பட இயலாது.

## 12.0 முனைவர் பட்டப்படிப்பு - காலம்

12.1. முனைவர் பட்டப்படிப்பின் காலம் மற்றும் ஆய்வேடு சமர்ப்பிப்பதற்கான நேரம் தற்காலிகப் பதிவு நாளிலிருந்து (அதாவது கட்டணம் செலுத்திய நாள்) கணக்கிடப்படுகிறது.

12.2. முதுநிலைப் பட்டம் முடித்த பிறகு முனைவர் பட்டம் சேருபவர்களுக்கு முழுநேர முனைவர் படிப்பின் குறைந்த அளவுக் காலம் 3 ஆண்டுகள் மற்றும் முதுநிலைப் பட்டத்துடன் ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil.) முடித்தவர்களுக்கு 2 ஆண்டுகளாகும். குறைந்த அளவுக் கால எல்லக்கு முன்னர் ஆய்வேட்டைச் சமர்ப்பிக்க இயலாது.

12.3. பகுதிநேர முதுநிலைப் படிப்பு முடித்த மாணவர்களுக்கு முனைவர் பட்ட ஆய்வேடு அளிக்க குறைந்த அளவுக் காலம் 4 ஆண்டுகள், மற்றும் முதுநிலைப் பட்டத்துடன் ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil.) முடித்தவர்களுக்குக் குறைந்த அளவுக் காலம் 3 ஆண்டுகள் ஆகும்.

முனைவர் பட்டப்படிப்பின் குறைந்த அளவுக் காலம்

| | முதுநிலை பட்டத்துடன் ஆய்வியல் நிறைஞர் பட்டம் இருப்பின் | முதுநிலை மட்டும் இருப்பின் |
|---|---|---|
| முழு நேரம் | 2 ஆண்டுகள் | 3 ஆண்டுகள் |
| பகுதி நேரம் | 3 ஆண்டுகள் | 4 ஆண்டுகள் |

12.4 காரணங்கள் பொருத்தமானதாகக் கருதப்பட்டால், முனைவர் பட்டப் படிப்புக் காலத்தில் மருத்துவ மற்றும் அனுமதிக்கப்பட்ட பிற கட்டாய காரணங்களுக்காக, அசாதாரண சூழ்நிலைகளில் முனைவர் பட்டப் படிப்பிற்கு இடையில் விடுப்பு எடுக்க அனுமதிக்கலாம். இருப்பினும் படிப்பு இடைவெளி முனைவர் பட்டப்படிப்பின் குறைந்த அளவுக் காலத்திற்குக் கணக்கில் கருதப்படாது.

12.5. படிப்பில் இடை நிறுத்தம் அதிக அளவாக ஓராண்டுக் காலம் வரை வழங்கப்படும். இதற்குரிய கோரிக்கை எழுத்துப்பூர்வமாக ஆய்வாளரால் ஆய்வு நெறியாளர் தலைவர் மற்றும் புலத்தலைவர் (Dean) பரிந்துரையுடன் இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும். படிப்பை இடைநிறுத்துவதற்கான உத்தரவு, இயக்குநரால் ஆய்வாளரின் கோரிக்கையின் பரிசீலனைக்குப் பிறகு தேவையிருப்பின் வழங்கப்படும். அவ்வாறு முன் அனுமதி கோரப்பட்டுப் பெறப்படவில்லை என்றால், அஃது ஆய்வுப் படிப்பு நிறுத்தமாகக் கருதப்பட்டு அத்தகைய ஆய்வாளரின் பதிவை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

படிப்பில் இடைநிறுத்தம் அதிக அளவுக் காலத்திற்குப் பிறகுக் கணக்கிடப்படும். இடைநிறுத்தம் செய்துள்ள காலத்திற்கும் முனைவர்பட்ட ஆய்வாளர் ஆண்டுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

12.6. முழுநேர மற்றும் பகுதிநேர ஆய்வாளர்களின் முனைவர் பட்டப் படிப்பின் அதிகபட்ச அளவுக் காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். அதற்குப் பின்னர் மறு பதிவு செய்யவேண்டும்.

**முனைவர் பட்டப்படிப்பின் அதிக அளவுக் காலம்**

| | | மறு பதிவு |
|---|---|---|
| முழு நேரம் | 5 ஆண்டுகள் | +1 ஆண்டு. இரண்டு ஆறு மாதகால, கால நீட்டிப்பு |
| பகுதி நேரம் | 6 ஆண்டுகள் | +1 ஆண்டு. இரண்டு ஆறு மாதகால, கால நீட்டிப்பு |
| மகப்பேறு / மாற்றுத் திறனாளி 40 வயதுக்கு மேல் உள்ளவர்கள் | | 2 ஆண்டுகள் |

12.7. மகப்பேறு விடுப்பு பெற்ற பெண் ஆய்வாளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி ஆய்வாளர்கள் (40 வயதுக்கும் அதிகமான வயது உடையவர்கள்) இரண்டு ஆண்டுகள் தளர்வு பெறலாம். எனவே இவர்களது அதிக அளவு முனைவர் பட்டப்படிப்பு காலம் 8 ஆண்டுகளாகக் கணக்கிடப்படும்.

## 13.0 கால நீட்டிப்பு

13.1. ஆய்வேட்டை அதிக அளவுக் காலத்திற்குள் (5 அல்லது 6 ஆண்டுகள்) சமர்ப்பிக்காத ஆய்வாளர்கள், ஆறு ஆண்டுகள் முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முந்தைய காலத்திற்குள் கால நீட்டிப்பிற்கு நெறியாளர், துறைத் தலைவர் மற்றும் புலத் தலைவர் (Dean) ஆகியோரின் பரிந்துரையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இதுபோன்ற சூழ்நிலைகளில் வழக்கமாக உள்ள அதிகபட்ச காலமான 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு மேல் அதிகமாக ஓர் ஆண்டுக் காலமாகக் கருணைக் காலம், துணைவேந்தரின் ஒப்புதலுடன் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரால் வழங்கப்படும்.

13.2. காலநீட்டிப்பு அளிக்கப்பட்ட முனைவர் பட்ட ஆய்வாளர் கால நீட்டிப்பு அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஓர் ஆண்டுக்குள் ஆய்வேட்டைச் சமர்ப்பிக்க அல்லது ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்கத் தவறினால் அவரது பதிவு வேறு எந்த முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

## 14.0 ஆய்வு ஆலோசனைக் குழு (RAC)

14.1. ஒவ்வொரு ஆய்வாளரின் ஆய்வுப் பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஓர் ஆய்வு ஆலோசனைக் குழு செயல்படும்.

14.2. ஆய்வு ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

ஆய்வு நெறியாளர், வெளி வல்லுநர், துறைத்தலைவர், புலத்தலைவர் ஆகியோர் ஆய்வு ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பர். ஆய்வு நெறியாளர் இதன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார்.

14.3. ஆய்வு ஆலோசனைக் குழுவிற்கு (RAC) ஒரு வல்லுநரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆய்வு நெறியாளர் அதே பாடத்தில் இணைப்பேராசிரியராக அல்லது பேராசிரியராக உள்ள மூவர் பெயரினைப் பரிந்துரைக்க வேண்டும். அவர்கள் நெறியாளராக அனுமதி பெற்றிருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட வல்லுநர்களில் இருந்து ஒருவரைத் துணைவேந்தர் நியமிப்பார். துறையிடைப் பாடங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வல்லுநரை நியமிக்கலாம்.

14.4 ஆய்வு ஆலோசனைக் குழு ஆய்வாளர்களின் ஆய்வு முன்னேற்றத்தை ஒவ்வொரு ஆறு மாதமும் மேற்பார்வை செய்யும். இவ்வாறு ஒவ்வொரு ஆறு மாதமும் குழு கூடுவதில் இடர்பாடு இருப்பின், துறை ஆய்வுக்குழு இப்பணியைச் செய்யலாம் அல்லது ஆய்வு நெறியாளர், துறைத்தலைவர், ஒரு தமிழ்ப் பல்கலைக்கழக வல்லுநர் கொண்ட குழுவைத் துணைவேந்தர் நியமிக்கலாம்.

14.5 முதல் ஆய்வு ஆலோசனைக் குழுக் கூட்டம், ஆய்வாளரின் தற்காலிகப் பதிவு உத்தரவு கிடைக்கப்பெற்ற இரண்டு மாதங்களுக்குள் கூட்டப்பட வேண்டும். ஒவ்வொரு ஆறுமாதமும் இந்த கூட்டத்தில் தற்காலிக ஆய்வுத் தலைப்பு மற்றும் ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடப்பணி (தாள் 3, தாள் 2 தேவைப்படின், பிற பாடங்கள் அவசியமிருப்பின்), அதன் பாடத்திட்டம் முடிவு செய்யப்படும். மேலும் முதல் RAC கூட்டத்தின் அறிக்கை நகல் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

## 14.6 ஆய்வு ஆலோசனைக் குழுவின் செயல்பாடுகள்

i. சேர்க்கை முதல் ஆய்வேட்டைச் சமர்ப்பிக்கும் வரை ஆய்வாளருக்கு ஆய்வு தொடர்பாக அனைத்து விதத்திலும் ஆலோசனை வழங்குதல், மற்றும் பரிந்துரைத்தல்.

ii. ஆய்வாளரின் ஆய்வுத் தலைப்பிற்கு ஏற்பளிப்பது.

iii. ஆய்வாளர் சமர்ப்பித்த ஆய்வு முன்வரைவை நுண்ணாய்வு செய்வது

iv. ஆய்வாளர் மேற்கொள்ள வேண்டிய பாடத்தாள்களைப் (பயிற்சிப்பணியை) பரிந்துரைத்தல்.

v. முனைவர் பட்ட ஆய்வாளர்களின் ஆய்வு முன்னேற்ற அறிக்கைகளைப் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் மதிப்பீடு செய்து ஒப்புதல் அளிப்பது, மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர் தனது ஆய்வுப்பணியைத் தொடர்வதற்கான தகுதி குறித்து அறிக்கை வழங்குதல்.

vi. தேவைப்பட்டால் ஆய்வுத் தலைப்பு மாற்றம், நெறியாளர் மாற்றம் மற்றும் ஆய்வாளரின் நிலை மாற்றம் (முழு நேரத்திலிருந்து பகுதிநேரமாகவும் மற்றும் பகுதிநேரத்திலிருந்து முழுநேரமாகவும்) குறித்து ஏற்பளித்தல்

vii. அவ்வப்போது ஆய்வாளரின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து ஒப்புதல் அளித்தல்.

viii. ஆய்வாளரின் ஆய்வுச் சுருக்கத்தை இயக்குநரிடம் சமர்ப்பிக்கும் முன் ஆய்வேட்டின் இறுதி வரைவின் விளக்கக்காட்சியை மேற்பார்வையிடுதல்.

ix. சோதனைகள், களப்பணிகளின் தன்மையை உறுதி செய்து மதிப்பிடுதல், ஆய்வகக் கண்காணிப்புக் குறிப்பேடுகள், தரவுப் பதிவுகள், பகுப்பாய்வு மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்தல்.

x. ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்க ஆய்வுப் பணியின் தரம் மற்றும் அளவை மதிப்பீடு செய்தல்

xi. பல்கலைக்கழக நல்கைக்குழுவின் (UGC CARE LIST/ Peer reviewed) பட்டியலிடப்பட்டுள்ள அல்லது கல்வியாளர்களால் நுண்ணாய்வு செய்யப்பட்ட இதழ்களில் ஆய்வாளர்களின் இரண்டு கட்டாய வெளியீடுகளைச் சரிபார்த்தல்; ஆய்வாளரின் ஆய்வுச் சுருக்கத்தினைச் சமர்ப்பிக்கவும் அனுமதித்தல்.

xii. ஆய்வேட்டின் சுருக்கத்தை ஏற்பளித்தல்.

xiii. வெளிநாட்டு மற்றும் இந்திய தேர்வாளர்கள் குழுவிற்கு ஒப்புதல் வழங்குதல்.

xiv. ஆய்வேட்டின் இறுதித் தலைப்பை ஏற்பளித்தல்.

xv. மதிப்பீட்டு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டிய திருத்தங்கள் ஏதேனும் ஆய்வேட்டில் இருப்பின், அவற்றைத் திருத்தம் செய்வதைக் கண்காணித்தல் வேண்டும்.

14.7 ஒருங்கிணைப்பாளர் (நெறியாளர் குழுவின் கூட்டுநர்) கல்வி நிலை ஆய்வு இயக்ககத்தின் இயக்குநரிடம் அறிவித்து ஆய்வு ஆலோசனைக் குழுவைக் கூட்டுவார்.

## 15.0 முனைவர் பட்டப் பயிற்சிப் பணி பாடத்திட்ட அமைப்பு

15.1 அனைத்து ஆய்வாளர்களும் (முழுநேரம் மற்றும் பகுதி நேரம்) பல்கலைக்கழக மானிய குழுவின் நிபந்தனைகளின்படி குறைந்தபட்சம் நான்கு பாடங்கள் Credits (கற்றல் அளவன்கள்) கொண்ட பாடத்தைப் பயில வேண்டும். பயிற்சிப் பணியில் கட்டாயமாக ஆராய்ச்சி நெறிமுறைப் பாடம் இருக்க வேண்டும். மற்ற பாடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சித் துறையில் சமீபகால முன்னேற்றங்கள், உயர்தர ஆய்வுத் தலைப்புகள், மற்றும் ஆய்வுச் சிக்கல் தொடர்பானவையாக இருக்க வேண்டும்.

பாடப்பணிவிவரம்

| | | |
|---|---|---|
| தாள் | 1 ஆய்வு நெறிமுறை | 4 அளவன்கள் |
| தாள் | 2 ஆய்வுப்பாடம் தொடர்பானது | 4 அளவன்கள் |
| தாள் | 3 ஆய்வேடு தொடர்பானது | 4 அளவன்கள் |
| தாள் | 4 ஆய்வு மற்றும் வெளியீட்டு அற நெறிமுறைகள் | 4 அளவன்கள் |
| கருத்தரங்கக் கட்டுரைகள் அளித்தல் (2) | | 2 அளவன்கள் |
| மொத்தம் | | 18 |

15.2. வேறு துறையுடன் இணைந்த ஆய்வு (Interdisciplinary research) மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் ஆய்வு ஆலோசனைக் குழு (RAC) பரிந்துரைத்த தலைப்புடன் தொடர்புடைய கூடுதல் பயிற்சிப் பணியைத் தேர்ந்தெடுக்கலாம்.

15.3. முனைவர் பட்டப்படிப்பிற்கு அனுமதிக்கப்பட்ட ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்ற மற்ற அனைவரும் முனைவர் பட்ட, நெறிமுறைப்படிப் பயிற்சிப் பணியை மேற்கொள்வது கட்டாயமாகும். ஏற்கனவே ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டம் பெற்று, முனைவர் பட்டப்படிப்பிற்கு அனுமதிக்கப்பட்டவர் ஆய்வியல் நிறைஞர் படிப்பு மேற்கொண்ட அதே ஆய்வை, முனைவர் பட்டப்படிப்பிலும் மேற்கொண்டால், பதிவு செய்த இரண்டு ஆண்டுக்குள் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றிருந்தால் அவருக்குப் பயிற்சிப் பணியிலிருந்து விலக்கு அளிக்கலாம். இருப்பினும், முனைவர் பட்டப் படிப்பின் பயிற்சிப் பணிக்கான இணையான (கற்றல் அளவன்) புள்ளிகள் (Credit) பெறத் தேவையான கூடுதல் தாள்களை (தலைப்பு தொடர்புடைய தாள், ஆய்வு மற்றும் வெளியீட்டு அறம்), எழுத வேண்டும்.

15.4. ஆய்வு ஆலோசனைக் குழு கூட்டம் பரிந்துரைத்த பாடங்களைத் (தாள்2, தாள்3) தவிர துறையின் அனைத்துப் பயிற்சிப் பணி பாடங்களும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்குக் கட்டாயமாகும்.

15.5. இறுதித் தேர்வில் ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்த மதிப்பெண்கள் 100 ஆக இருக்கும். எழுத்துத் தேர்வு 75 + அகமதிப்பெண் 25. பாடப்பயிற்சி பணியில் தேர்வு எழுதுபவர் குறைந்தபட்சம் 50 விழுக்காடு பெற்றிருக்க வேண்டும். தோல்வியுற்றால் அவர் மீண்டும் அடுத்த பருவமுறையில் அதே பயிற்சிப் பணித் தேர்வை மேற்கொள்ள வேண்டும். ஓர் ஆய்வாளர் பாடப் பயிற்சிப் பணியில் மூன்று முறைக்குள் தேர்ச்சி பெறாவிட்டால், அவரது முனைவர் பட்டப் பதிவு இரத்துச் செய்யப்படும்.

15.6. முழுநேர ஆய்வாளர் தங்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு தொடர வேண்டி தற்காலிகப் பதிவு செய்த நாளிலிருந்து பதினெட்டு மாத காலத்திற்குள் பயிற்சிப் பணியை முடிக்க வேண்டும். பகுதிநேர மாணவர்கள் 24 மாத காலத்திற்குள் பயிற்சிப் பணியை முடிக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் பயிற்சிப் பணியை முடிக்கத் தவறியவர்களுக்கு, ஆய்வு ஆலோசனைக் குழு அவர்களின் செயல்திறனில் நம்பிக்கை இருப்பின் மேலும் ஆறு மாதங்களுக்குக் காலத்தை நீட்டிக்கப் பரிந்துரைக்கலாம். இல்லையெனில் RAC முனைவர் பட்டப் பதிவை இரத்து செய்யப் பரிந்துரைக்கும்.

15.7. ஓர் ஆய்வாளர் 75 விழுக்காட்டிற்கும் அதிகமான வருகைப்பதிவு மற்றும் தேர்வுகளை எழுதி, அனைத்துப் பாடங்களிலும் குறைந்தபட்சம் 50% மதிப்பெண்களைப் பெற்றிருந்தால் மட்டுமே அவர் பயிற்சிப் பாடத்தில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவார்.

15.8 முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், ஒரு பருவத்தில் அதிகபட்சமாக 15 நாள் வரை விடுப்புப் பதிவு செய்யலாம். முனைவர் பட்டப் படிப்புப் பயிலும் ஆய்வாளர்கள் (முழுநேரம் / பகுதிநேர ஆய்வாளர்கள்) முதல் நான்கு பருவங்களுக்குள் தங்கள் பயிற்சிப் பணியை முடிக்க வேண்டும்.

15.9. முனைவர் பட்டத்திற்கான பயிற்சிப் பணியை வெற்றிகரமாக முடிப்பதும் முனைவர்பட்ட ஆய்வேட்டைச் சமர்ப்பிப்பதும் முனைவர் பட்டத்திற்கான முதன்மைத் தேவைகளாகும்.

## 15.10. தற்காலிகப் பதிவை உறுதிப்படுத்தல்

பயிற்சிப்பணி பாடத் தேர்வை வெற்றிகரமாக முடித்த பிறகு, பயிற்சிப் பணியின் நிறைவைச் சரிபார்க்கவும் ஆய்வுத்தலைப்பை உறுதி செய்யவும், முன்னேற்றத்தை மதிப்பிடவும் ஆய்வு ஆலோசனைக் குழுக் கூட்டம் (RAC) கூட்டப்படவேண்டும்.

ஆய்வாளரின் முன்னேற்றம் நிறைவளிக்கும் வகையில் இருப்பின் ஆய்வு ஆலோசனைக் குழு பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தற்காலிகப் பதிவைப் பரிந்துரைத்து மேலும் முனைவர் பட்டப் பதிவிற்குரிய சரிபார்ப்புப் பட்டியலுடன், கூட்ட அறிக்கை வழியாக உறுதிப்படுத்தும்.

15.11. முதல் ஆய்வு ஆலோசனைக் குழு கூட்டத்தில் பரிந்துரைத்த அனைத்துப் பயிற்சிகளையும் முடித்த பிறகு ஆய்வு பணியில் நிறைவளிக்கும் வகையில் முன்னேற்றம் காணப்பட்டால், கல்விநிலை ஆய்வு இயக்கக (DARE) இயக்குநரால் தற்காலிகப் பதிவு உறுதிப்படுத்தப்படும். தற்காலிகப் பதிவு பெற்ற நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் அல்லது மொத்த ஆய்வுக் காலத்திற்குள் முனைவர் பட்டப் படிப்பிற்குத் தேவையான நடைமுறைகள் நிறைவு செய்யாதவரின் தற்காலிகப் பதிவு இரத்து செய்யப்படும்.

## 16.0 பல்கலைக்கழகத்திற்கு வெளியே ஆய்வு

16.1 ஆய்வாளர் பல்கலைக்கழகத்திற்கு வெளியே அமைந்துள்ள ஒரு நிறுவனத்திலோ, தேசிய ஆய்வகத்திலோ அல்லது ஆய்வு மையத்திலோ, தற்காலிகப் பதிவு உறுதிப்படுத்தப்பட்டப் பிறகு, அதிக அளவாக ஓர் ஆண்டு மட்டுமே அவரது ஆய்வை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்.

இத்தகைய முனைவர்பட்ட ஆய்வாளர் வெளி நிறுவனத்தில் ஆய்வுச் செய்ய ஆய்வு நெறியாளரால் பரிந்துரைக்கப்பட்டுத், துறைத்தலைவர் மற்றும் புலத்தலைவர் ஆகியோர் வழியாக மேலனுப்பபட்டால் மட்டுமே இந்த ஆய்வுப்பணி கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரால் ஏற்பளிக்கப்படும். இவ்வாறு வெளி நிறுவன ஆய்வுப் பணிக்குச் செல்லும் முன்னர் முறையாக அனுமதி பெற வேண்டும்.

16.2. பல்கலைக்கழகத்திற்கு வெளியே உள்ள நிறுவனங்களில் ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள், அங்கிருந்து திரும்பிய பின் குறைந்த அளவாக இரண்டு மாதத்திற்குப் பிறகே ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தகைய வெளிப்புற ஆய்வுப் பணியின் காலத்தில் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு, முனைவர் பட்டப் பாடத் துறைக்குப் பொருந்தி இருக்க வேண்டும். மேலும், ஆய்வு நெறியாளர் பங்களிப்பு இருந்தால் மட்டுமே நெறியாளரின் பெயரைக் கட்டுரையாளர்களுள் ஒன்றாகக் கொண்டிருக்க வேண்டும். ஆய்வாளரின் பங்களிப்பு அதிகமாக உள்ள நிலையில் ஆய்வாளரின் பெயர் முதலாவதாக இருக்க வேண்டும். இதில் கருத்துவேறுபாடுகள் உள்ள நிலையில் புல முதன்மையர், கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநர் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

16.3. பல்கலைக்கழகத்திற்கு வெளியில் ஒரு குறிப்பிட்ட ஆய்வுப் பணி செய்ய பிரிவு 16.1-இல் உள்ளபடி அனுமதி பெறும் ஆய்வாளர்கள், பல்கலைக்கழகத்திற்கு திரும்பும் போது, நிறுவனத்தில் இருந்து பணியின் காலம் குறித்த சான்றிதழ் மற்றும் சுருக்கமான ஆய்வேட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

16.4. ஆய்வாளர் பல்கலைக்கழகத்திற்கு வெளியே உள்ள நிறுவனத்தில் குறிப்பிட்ட ஏற்பளிக்கப்பட்ட காலத்திற்கு மேல் முன் அனுமதி பெறாமல் தொடர்ந்து தங்கினால், அவருடைய பதிவு தானாகவே இரத்துச் செய்யப்படும்.

## 17.0. ஆய்வாளரின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்

17.1. முழுநேர மற்றும் பகுதிநேர ஆய்வாளர்கள் இருவருமே பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆய்வு முன்னேற்ற அறிக்கைகளை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, ஆய்வு ஆலோசனைக் குழுவின் அல்லது துறை ஆய்வுக்குழுவின் நேரடி ஒப்புதல் அல்லது துணைவேந்தர் நியமிக்கும் சிறப்புக்குழுவின் ஒப்புதல் பெற்றுத் தங்கள் ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்கும் வரை கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

17.2. ஆய்வு முன்னேற்ற அறிக்கைகளை, அவ்வப்போது சமர்ப்பிக்கத் தவறுதல், பதிவு தானாக இரத்துச் செய்யப்படுதலுக்கு வழிவகுக்கும்.

17.3. ஆய்வு ஆலோசனைக் குழுவின் கூட்டத்தின் அறிக்கை உரிய இணைப்புகளுடன் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

17.4. ஆய்வு நெறியாளர் அல்லது ஆய்வாளர் வெளிநாட்டில் இருந்தாலும், பிற தவிர்க்க முடியாத காரணங்களாலும் ஆய்வு ஆலோசனைக் கூட்டத்தைத் துணைவேந்தரவர்களின் முன்அனுமதி பெற்று இணையவழியில் காணொளிக் கூட்டமாக நடத்தலாம். அவ்வாறு காணொளி வழி நடத்தப்பட்டால் அதன் மின்னணுப் பதிவைக் குறுந்தகட்டில் அளிக்க வேண்டும்.

17.5. ஆய்வேடு சமர்ப்பிக்கும் முன்னர் ஆய்வு ஆலோசனைக் குழுவின் முன்னிலையில் ஆய்வுச் சுருக்கத்தை வாய்மொழியாக முன் வைப்பது (ஆய்வு விளக்கக்காட்சி, Pre-Phd Oral presentation) கட்டாயமாகும். இதற்கான அறிவிப்புடன் ஆய்வுச் சுருக்கத்தின் வரைவைக் கல்விநிலை ஆய்வு இயக்ககத்திற்கு அனுப்பவேண்டும். இந்த விளக்கக்காட்சி ஆய்வு ஆலோசனைக்குழுவின் முன்னிலையில் நடைபெறும். இஃது ஆய்வின் தரம் மற்றும் கண்டுபிடிப்புகளைக் குழு மதிப்பீடு செய்ய வழிவகுக்கிறது. மேலும் உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் கருத்துகளைக், குறிப்புகளை ஆய்வில் ஒருங்கிணைக்க வழி செய்கிறது. இதே நேரத்தில் திருந்திய ஆய்வுச் சுருக்கத்தையும் ஆய்வு ஆலோசனைக்குழு மேற்பார்வையிட்டுத் திருத்தம் செய்து இறுதி செய்யலாம். ஆனால் இதற்கு முன்னர் ஆய்வுக்கட்டுரையைக் குறிப்பிட்ட UGC CARE அல்லது Peer Reviewed இதழ்களில் வெளியிட்டிருக்க வேண்டும்.

17.6. முனைவர் பட்ட ஆய்வாளரின் ஆய்வு விளக்கக்காட்சி, ஆய்வுச் சுருக்கம் சமர்ப்பிக்கும் முன்பு ஆய்வு ஆலோசனைக் குழு, துறைப் பேராசிரியர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள், ஆய்வியல் நிறைஞர் மற்றும் முதுநிலை மாணவர்கள் முன்னிலையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

17.7. இந்த முன் வாய்மொழித் தேர்வின் பங்கேற்பாளர்கள் ஆய்வுப் பணியை மேம்படுத்துவதற்குப் புதிய ஆலோசனைகள், கருத்துகள் குறிப்புகள், பரிந்துரைகளை வழங்கலாம்.

17.8. இந்த முன் வாய்மொழித் தேர்வின் அறிக்கை, வருகைப் பதிவேட்டுடன், ஆய்வுச் சுருக்கத்தினைச் சமர்ப்பிக்கும் துறைத்தலைவர், புலத்தலைவர் வழியாக ஆய்வு நெறியாளரால் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். இணைய வழியாக நடத்தினால் அதன் காணொளிப் பதிவை அனுப்ப வேண்டும். இணைய வழியாக இக்கூட்டத்தை நடத்தவேண்டிய அவசியம் ஏற்படின் உரிய முன் அனுமதி பெற வேண்டும்.

## 18.0. ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பித்தல்

18.1. ஆய்வாளர்கள் குறைந்த கால அளவு முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பட்டியலிடப்பட்டுள்ள / Peer reviewed இதழ்களில் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட பின்னர் தனது ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவர்.

18.2. முனைவர் பட்ட ஆய்வாளர் குறைந்த கால அளவை முடித்துள்ளார் எனக் கூறும் ஆய்வு நெறியாளர், இணை நெறியாளர் (இருப்பின்), மற்றும் துறைத்தலைவர் அவர்களால் கையொப்பமிட்ட சான்றிதழைப் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் இணைக்க வேண்டும்.

18.3. முனைவர் பட்ட ஆய்வாளர்கள் (UGC CARE LIST), ஸ்கோபஸ் (Scopus) மற்றும் வெப் ஆப் சையின்ஸ் (Web of Science) பட்டியலிலுள்ள அல்லது peer reviewed இதழ்களில் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட வேண்டும் அல்லது வெளியிட ஏற்றுக்கொள்ளப்பட்டவை ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்கும் முன்னர் வெளியிட வேண்டும். கருத்தரங்கில் இரண்டு ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கவேண்டும். தவறினால் ஆய்வுச் சுருக்கம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

18.4 ஆய்வாளர் ஆய்வு ஆலோசனைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கத்தின் ஐந்து பிரதிகளை, மென் நகலுடன் (Soft Copy) ஆய்வு நெறியாளர், துறைத்தலைவர் மற்றும் அந்தந்தப் புலத்தின் தலைவர் (Dean) வழியாக கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

18.5 ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிக்கும் முன்னர் ஆய்வின் தரம் மற்றும் ஆழத்தை மதிப்பீடு செய்வதற்கும், ஆய்வுச் சுருக்கத்தின் உள்ளடக்கங்கள், இரண்டு ஆய்வுக் கட்டுரை வெளியீடுகளைச் சரிபார்க்கவும், இந்திய மற்றும் வெளிநாட்டுத் தேர்வாளர்கள் உள்ளடக்கிய பட்டியல் ஏற்பளிக்கவும், ஆய்வு ஆலோசனைக் குழு கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு மதிப்பீடு செய்த அனைத்தும் ஆய்வு ஆலோசனைக் குழு அறிக்கையாக, சமர்ப்பிக்கும் போது, இவற்றுடன் ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிப்பதற்கான சான்றிதழ், ஆய்வுச் சுருக்கம் சமர்ப்பிப்புப் படிவம் மற்றும் சரிபார்ப்புப் பட்டியல் ஆகியவற்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

18.6. முன் வாய்மொழித் தேர்வு (PreVivaVoce) நடத்திய முனைவர்பட்ட ஆய்வு விளக்கக்காட்சி அளித்த பின்னர் ஆய்வுச்சுருக்கம் சமர்ப்பித்தலையும் ஆய்வு ஆலோசனைக் குழு மதிப்பீட்டிற்குப் பின்னர் செய்யலாம்.

18.7. ஆய்வு நெறியாளர் ஆய்வு ஆலோசனைக் குழுவால் முறையாக ஏற்பளிக்கப்பட்ட தேர்வாளர்கள் (இந்திய மற்றும் வெளிநாட்டு) வல்லுநர் பட்டியலை ஆய்வுச் சுருக்கத்துடன் முறையான வழியில் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும். பத்து தேர்வாளர்கள் கொண்ட குழு (வெளிமாநிலம் 4 மற்றும் தமிழகத்தில் 6) ஆய்வு நெறியாளரால் வழங்கப்பட வேண்டும். தேர்வாளர்கள்

புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல் அவசியம். இவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம் அல்லது தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு உள்ள நிறுவனங்களில் வல்லுநர்களாக இருக்கக்கூடாது.

18.8. அவ்வாறு முன்மொழியப்பட்ட இந்திய தேர்வாளர்கள், முனைவர் பட்ட வழிகாட்டல் அனுமதி பெற்ற மற்றும் முதுகலை நிலையில் 12 ஆண்டுகளுக்குக் குறையாத கல்விப் பணி அனுபவமும், தேசிய சர்வதேச அளவிலான இதழ்களில், அதே துறையில் அல்லது தொடர்புடைய துறையில் கட்டுரைகள், ஆய்வேடுகள், வெளியீடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

18.09. ஆய்வாளர்கள் தனது ஆய்வுப் பணியின் ஒரு பகுதியைக் குறுகிய காலத்தில் வேறு நிறுவனத்தில் மேற்கொண்டிருந்தால், அந்த நிறுவனத்தின் விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் பெயர்களை வல்லுநர் பட்டியலில் சேர்க்கக்கூடாது.

18.10. தேர்வாளர்கள் புகழ்பெற்ற நிறுவனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது துணைவேந்தரின் கவனத்திற்கு வந்தால், துணைவேந்தர் அவரது விருப்பப்படித் தேர்வாளர்களைக் (இந்திய மற்றும் வெளிநாட்டு) கொண்ட புதிய குழுவை அமைக்கலாம்.

18.11. இந்திய மற்றும் வெளிநாட்டுத் தேர்வாளர்களில் இருந்து 1 முதல் 5 வரை முன்னுரிமைப்படுத்தி முதல் தேர்வாளருக்கு ஆய்வுச்சுருக்கத்தை அனுப்பி அவ்விருவரின் மதிப்பீடு செய்வதற்கு ஏற்புக் கடிதத்தைக் கோர வேண்டும். இவர்களில் ஓர் இந்தியரையும், வெளிநாட்டினர் ஒருவரையும், தேர்வர்கள் குழுவிலிருந்து துணைவேந்தர் தேர்ந்தெடுப்பார்.

18.12. ஒரு தேர்வாளர் கல்விநிலை ஆய்வு இயக்ககத்தின் அழைப்பை ஏற்று மதிப்பீடு செய்ய ஒப்புக்கொண்டவுடன் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநர், ஆய்வேடு மற்றும் தொடர்புடைய படிவங்கள், வழிகாட்டு நெறிகள் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகளுடன் தேர்வாளருக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

இயக்குநரின் கடிதம், தேர்வாளர்களுக்கு, அவர்களின் நியமனத்தின் இரகசியத் தன்மையை வலியுறுத்தி நெறியாளர், ஆய்வாளர்கள் மற்றும் எவரிடமும் தேர்வாளர் நியமனம் குறித்த தகவலை வெளிப்படுத்த வேண்டாம் எனவும் வலியுறுத்தி எழுதப்பட வேண்டும்.

18.13. ஒரு தேர்வாளர், ஆய்வேடு மதிப்பீட்டிற்கான அழைப்பை ஏற்க மறுத்தால், ஆய்வுச் சுருக்கம் அடுத்த தேர்வாளருக்கு அனுப்பப்படும்.

18.14 ஆய்வேடு மதிப்பிடுவதற்கான ஏற்புக் கடிதத்தை மின்னஞ்சலிலும் பெறலாம். ஆய்வுச் சுருக்கத்தை அனுப்பிய மூன்று வாரங்களுக்குப் பிறகு தேர்வாளரிடம் பதில் இல்லை என்றால் முன்னுரிமையின் அடிப்படையில் அதே வரிசைப்படி குழுவில் உள்ள அடுத்த

தேர்வாளருக்கு இயக்குநர் ஆய்வுச் சுருக்கத்தை அனுப்ப வேண்டும். இருப்பினும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் இயக்குநர் அலுவலகம் தேர்வாளருக்கு நினைவூட்டல் செய்யலாம்.

18.15 முதல் தேர்வாளர் குழுவில் இருந்து ஆய்வேட்டை, மதிப்பிடுவதற்கான ஒப்புதலைப் பெற இயலவில்லை எனில், இயக்குநர் ஆய்வு நெறியாளரிடமிருந்து புதிய குழுவைக் கோர வேண்டும்.

## 19.0. ஆய்வேடு சமர்ப்பிப்பு

19.1 ஆய்வேட்டை, ஆய்வாளரின் (அசல்) உண்மையான ஆய்வுப் பணியை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அறிவுசார்ந்த முறையில் எடுத்துரைக்கும் ஒன்றாக, புதிய படைப்புகள், தகவல்கள், நுட்பங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து வெளியிடுவதாகவும் அல்லது ஏற்கனவே அறிந்த உண்மைகளின் அடிப்படையில் புதிய கருத்துருக்களை வெளிப்படுத்துவதாகவும் (பகுப்பாய்வு, சோதனை முதலியனவற்றின் அடிப்படையில்) மற்றும் அறிவு முன்னேற்றத்திற்குத் தரமான பங்களிப்பை வழங்கும் ஒன்றாகவும், ஆய்வாளரின் நீடித்த ஆய்வு செய்யும் திறனை விளக்கும் ஒன்றாகவும் திகழ வேண்டும்.

19.2. ஆய்வேடு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட முறை மற்றும் விவரக்குறிப்பைப் பின்பற்றி உருவாக்கப்பட வேண்டும். ஆய்வேட்டின் ஐந்து (5) அச்சுப் பிரதிகளுடன் மென்நகலைக் (Sofy copy வடிவம்) குறுந்தகட்டில் ஒவ்வொரு ஆய்வேட்டின் நகலிலும் ஒன்று என ஆய்வேடு சமர்ப்பிப்பதற்கான படிவத்துடன் மற்றும் சரிபார்ப்புப் பட்டியலுடன் நிர்ணயிக்கப்பட்ட கால நிறைவுக்குப் பின் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரிடம் (DARE) சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆய்வேடு 350 பக்கம் வரை உடையதாக அமையலாம்.

19.3. **ஆய்வேட்டில் ஆய்வாளரின் உறுதியளித்தல் அறிக்கை (Declaration)**

ஆய்வேடு ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுப் பணியின் (அசல்) உண்மையான பதிவேடு எனவும் ஆய்வேடு அல்லது அதன் பகுதிகள் மற்ற சான்று நூல்கள், கட்டுரைகளிலிருந்து எடுக்கப்படவில்லை, மேலும் வேறு எங்கும் பட்டம் அல்லது பட்டயம் பெற சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் நெறியாளர் மற்றும் இணை-நெறியாளர் (இருப்பின்) பரிந்துரைத்த சான்றிதழுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

19.4. முனைவர் பட்ட ஆய்வேட்டுடன் பரிந்துரைக்கப்பட்ட ஆய்விதழ்களில் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

19.5. முனைவர்பட்ட ஆய்வுத் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட வெளியீடுகளின் நம்பகத்தன்மை மற்றும் தரம், மற்றும் ஆய்வுக் கட்டுரைகளில், ஆய்வு மாணவர் மற்றும் நெறியாளர் முறையே முதல் மற்றும் தொடர்புடைய ஆசிரியர்கள் பட்டியலிடப்பட்டுச் சரியான இணைப்புகளுடன் (Annexures) உள்ளதா என உறுதிப்படுத்தி ஆய்வு ஆலோசனைக் குழு (RAC) அல்லது துறை ஆய்வுக்குழு அல்லது துணைவேந்தர் நியமிக்கும் சிறப்புக்குழு சான்றளிக்க வேண்டும்.

19.6. ஆய்வேட்டைச் சமர்ப்பிக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் ஆய்வாளர்கள் அனுமதிக்கப்பட்ட பருவத்தில் கல்விக் கட்டணம் செலுத்த வேண்டும். வேறு ஏதேனும் கட்டணங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும் போது அவற்றையும் செலுத்த வேண்டும். அவ்வாறு ஆய்வாளர் கல்விக் கட்டணம் மற்றும் பிற அறிவிக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தாமல் இருந்தால், ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வேடு அனைத்துக் கட்டணங்களும் செலுத்தப்படும் வரை ஏற்கப்படமாட்டாது. ஆய்வேட்டைச் சமர்ப்பிக்கும் போது நிலுவை இல்லாச் சான்றிதழைக் கட்டாயம் இணைக்க வேண்டும்.

19.7. முனைவர் பட்டம் வழங்கத் தகுதி பெற பின்வரும் நிபந்தனைகளுக்கு ஆய்வேடு உடன்பட்டிருக்க வேண்டும்.

i. புதிய கருத்துகளை, உண்மைகளைக் கண்டறியும் விதத்தில் அல்லது உண்மைகள் மற்றும் கோட்பாடுகளைப் புதுமையான அணுகுமுறை மூலம் விளக்கும் விதத்தில் அமையப்பட்ட ஆய்வுப் பணியாக இருக்க வேண்டும்.

ii. இஃது ஆய்வாளரின் பரிசோதனை மற்றும் திறனாய்வுத் தகுதிகளைப் பிரதிபலிக்க வேண்டும்.

iii. ஆய்வேடு முறையாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

19.8. ஆய்வேடு பிற்சேர்க்கைகள், துணைநூற்பட்டியல் போன்றவைத் தவிர்த்து 350 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பக்கங்களைவிட ஆய்வேடு அதிகமாக இருந்தால் உரிய காரணங்களுடன் ஆய்வு நெறியாளர் இயக்குநருக்கு எழுதி, அவரிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும். ஆய்வேடு A4 தாள் அளவில் இருக்க வேண்டும். ஆய்வேடு தயாரிப்பதற்கான விவரக் குறிப்புகள் மற்றும் ஆய்வேட்டின் மாதிரி அட்டைப் பக்கம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

19.9. ஆய்வேடு தாள் மற்றும் அஞ்சல் கட்டணத்தைக் குறைக்கும் வகையில் தாளின் இருபுறமும் தட்டச்சு / கணினியச்சுச் செய்யப்பட வேண்டும்.

19.10. சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு தனது மேற்பார்வையின் கீழ் ஆய்வாளர் செய்த ஆய்வுப் பணியின் அறிக்கை எனவும், இதற்கு முன் வேறு பட்டம், பட்டயம் மற்றும் வேறு எந்த ஆய்விற்கும் இஃது அளிக்கப் பெறவில்லை என்றும் நெறியாளர் அளித்த சான்றிதழை ஆய்வேடு கொண்டிருக்க வேண்டும்.

ஆய்வேடு எந்த அளவிற்கு ஆய்வாளரின் தன்முயற்சியால் உருவானது, மற்றும் கருத்துக் களவின்மை உடையது என்பதையும் குறிக்கும் விதமாக நெறியாளர் உறுதிமொழி அமையவேண்டும்.

19.11. முனைவர்பட்ட ஆய்வாளர் ஆய்வேட்டில் எழுதப்பட்ட ஆய்வுப் பணி தன்னால் மேற்கொள்ளப்பட்டது எனவும் மற்றும் பிற சான்றுகளிலிருந்து ஏதேனும் குறிப்புகள் எடுத்தாளப்பட்டு இருந்தால் அவை முறையாகச் சுட்டப்பட்டுள்ளன எனவும் ஆய்வேட்டின் எந்தப் பகுதியிலும் கருத்துக் களவு இல்லை என்ற உறுதிமொழிப் படிவத்தை அளிக்கவேண்டும். மேலும் நூலகத்தில் தனது ஆய்வேட்டின் மென் நகலை அளித்து Plagiarism Check சான்றிதழ் பெற்று ஆய்வேட்டில் இணைக்க வேண்டும். (UGC Regulations 2018, 23 may 2018) 10 விழுக்காடு வரையான எழுத்து ஒற்றுமை இருப்பின் ஆய்வேட்டை சமர்ப்பிக்கலாம். 11 –முதல் 40 விழுக்காடு ஒற்றுமை இருப்பின் ஆறு மாதத்திற்குள் ஆய்வேட்டைத் திருத்தி அளிக்கவேண்டும். 40 –முதல் 60 விழுக்காடு ஒற்றுமை இருப்பின் ஒரு வருடத்திற்குள் ஆய்வேட்டை திருத்தி அளிக்கவேண்டும். 60 விழுக்காடுக்கு மேல் ஒற்றுமை இருப்பின் மாணவருடைய பதிவு இரத்து செய்யப்படும்.

19.12. அனைத்துத் துறைகளிலும் முனைவர் பட்ட ஆய்வேடு தமிழ் மொழியில் அமைய வேண்டும். தமிழ்த் தாய்மொழியாக இல்லாதவர்கள், அதாவது இளங்கலையில், தமிழ் படிக்காதவர்கள், அறிவியல் புலத்தில் உள்ளவர்கள் ஆகியோர் ஆய்வேட்டை ஆங்கிலத்தில் அளிக்கலாம். ஆய்வேட்டின் மொழி குறித்த பரிந்துரை ஆய்வு ஆலோசனைக் குழுவால் பரிந்துரை செய்யப்படும். ஆங்கில ஆய்வேடுகளுக்கு 30 பக்க அளவில் தமிழில் ஆய்வுச் சுருக்கம் அளிக்க வேண்டும்.

## 20.0. ஆய்வேடு மதிப்பீடு

20.1. ஆய்வு ஆலோசனைக் குழு பரிந்துரைத்த தேர்வாளர்கள் குழுவில் இருந்து, துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட இரண்டு தேர்வாளர்களுக்கு (இந்தியாவிலிருந்து ஒருவரும், வெளிநாட்டிலிருந்து மற்றொருவரும்) ஆய்வேடு அனுப்பப்படும். துணைவேந்தர் தேவை எனக் கருதினால் குழுவிற்கு வெளியிலிருந்தும் தேர்வாளர்களை நியமிக்கலாம்.

20.2 . நியமிக்கப்பட்ட தேர்வாளர்கள், ஆய்வேட்டை மதிப்பீடு செய்து அதன் தரம் பற்றிய அறிக்கையின் அடிப்படையில் முனைவர் பட்டம் அளிக்கப்படும். ஒவ்வொரு தேர்வாளரும், கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரால் அனுப்பப்பட்ட முறையாக நிரப்பின படிவம் நீங்கலாக ஆய்வேடு குறித்த விரிவான அறிக்கையை அளிக்க வேண்டும்.

20.3. தேர்வாளர்கள் ஆய்வேடு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் தங்களது அறிக்கையை கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். தேர்வாளர்கள் தங்கள் அதிகாரப்பூர்வ பணிசார்ந்த மின்னஞ்சல் முகவரியிலிருந்து அறிக்கையை அனுப்பினால் மட்டுமே மின்னஞ்சல் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படும்.

20.4. ஒரு தேர்வாளர் குறிப்பிட்ட காலத்திற்குள் மதிப்பீட்டு அறிக்கையை அனுப்பத் தவறினால் காலக்கெடு முடிந்தபிறகு உடனடியாக ஒரு நினைவூட்டலை அனுப்பி, அடுத்த பதினைந்து நாள்களுக்குள் அறிக்கையை அனுப்புமாறு கோர வேண்டும். அதன் பின்னர் மேலும் ஒரு நினைவூட்டலும் பதினைந்து நாள்களும் அளிக்கலாம்.

சம்பந்தப்பட்ட தேர்வாளர் கால நீட்டிப்பிற்குப் பிறகும் ஒத்துழைக்கவில்லை என்றால் இயக்குநர் நியமனத்தை உடனடியாக இரத்துச் செய்துவிட்டு ஆய்வேட்டை மதிப்பீடு செய்ய ஏற்பளிக்கப்பட்ட குழுவிலிருந்து அடுத்த தேர்வாளரை அழைக்க வேண்டும்.

20.5 தேர்வாளர்கள் கூடுதல் அவகாசம் கோரினால், நியமனம் இரத்துச் செய்யப்பட்ட பின் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றால் அல்லது அஞ்சல் தாமதம் அல்லது அறிக்கையைத் தொலைத்து விடுதல் முதலியனவற்றிற்கு, துணைவேந்தருடன், கலந்தாலோசித்து உண்மைகளின் அடிப்படையில் பொருத்தமான முடிவு எடுக்கப்படும்.

20.6. நியமிக்கப்பட்ட இரு தேர்வாளர்களும் தனிப்பட்ட விரிவான அறிக்கைகளை முறையான படிவத்தில் விவரக் குறிப்புடன் இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். இயக்குநர் ஆய்வு மாணவரின் ஆய்வு நெறியாளருக்கு அறிக்கைகளை அனுப்புவார்.

20.7. இரண்டு தேர்வாளர்களும் ஒருமனதாகப் பட்டம் வழங்கப் பரிந்துரை செய்தால் ஆய்வாளர் பொது வாய்மொழித் தேர்விற்கு அழைக்கப்படுவார்.

20.8. இரண்டு தேர்வாளர்களும், பட்டம் வழங்குவதற்கு எதிராகத் திட்டவட்டமாகப் பரிந்துரைத்திருந்தால் ஆய்வேடு நிராகரிக்கப்படும்.

20.9. தேர்வாளர்களில் ஒருவர் ஆய்வேட்டைப் பட்டம் வழங்குவதற்கு பரிந்துரைத்து, மற்ற தேர்வாளர் ஆய்வேட்டை நிராகரித்தால், ஆய்வேடு அதே வகையைச் சேர்ந்த மூன்றாவது

அதாவது இந்திய அல்லது வெளிநாட்டுத் தேர்வாளரின் மதிப்பீட்டிற்குப் பரிந்துரைக்கப்படும்.

20.10. மூன்றாவது தேர்வாளருக்கு மற்ற இரண்டு தேர்வாளர்களால் அளிக்கப்பட்ட அறிக்கை வழங்கப்படாது. மூன்றாவது தேர்வாளர் பட்டம் வழங்கப் பரிந்துரைத்தால், முனைவர் பட்டப் பொது வாய்மொழித் தேர்வுக்கு ஆய்வாளர் வரவழைக்கப்படுவார். மூன்றாவது தேர்வாளரும், பட்டம் வழங்கப் பரிந்துரைக்காவிடில், ஆய்வேடு நிராகரிக்கப்படும்.

20.11. ஆய்வேட்டில் தேர்வாளர்கள் திருத்தங்கள், ஆலோசனைகள், மாற்றங்களைப் பரிந்துரைத்து, மீண்டும் சமர்ப்பிக்க வலியுறுத்தாமல் ஆய்வாளரை அம்மாற்றங்கள், திருத்தங்களை ஆய்வேட்டில் மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டிருப்பின், ஆய்வு நெறியாளர் மூலம் முனைவர்பட்ட ஆய்வாளருக்குத் தகவல் அளிக்கப்படும்.

முனைவர்பட்ட ஆய்வாளரும் தேர்வாளர் பரிந்துரைத்த திருத்தங்களைச் செயல்படுத்த வேண்டும். நெறியாளர், ஆய்வு ஆலோசனைக் குழு மற்றும் கல்விப் புலத்தலைவர் (Dean) அவர்களின் ஒப்புதல் பெற்றுத், திருத்தங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றிதழை ஆய்வு நெறியாளர் வழங்குவார். திருத்தப்பட்ட ஆய்வேடு மற்றும் சான்றிதழ் பொது வாய்மொழித் தேர்வுக்கு முன் கல்வி நிலை ஆய்வு இயக்கக இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

20.12. தேர்வாளர்(கள்) திருத்தம் மற்றும் மறுசமர்ப்பீட்டைப் பரிந்துரைத்தால் ஒருவர் அல்லது இருவருடைய திருத்தக் குறிப்புகளின் விவரத்தை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

ஆய்வாளரால் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுத், திருத்தப்பட்டப் பதிப்பு, இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். அவர் சம்பந்தப்பட்ட தேர்வாளருக்கு(களுக்கு) ஆய்வேட்டை அனுப்புவார். தேர்வாளர்(கள்) திருத்தப்பட்ட பதிப்பில் இன்னும் திருப்தி அடையவில்லை என்றால் ஆய்வேடு மற்றொரு தேர்வாளருக்கு அனுப்பப்படும். இந்தத் திருத்தங்களைத் தேர்வாளர்கள் ஏற்றுக்கொண்டால் பொது வாய்மொழித் தேர்வு நடத்தப்படும். இந்நிலையில் அறிக்கை தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வுக்குழுவின் பரிந்துரையைப் பெறவேண்டும்.

## 21.0. பொது வாய்மொழித் தேர்வு

21.1. தேர்வாளர்களின் அறிக்கைகள் பொது வாய்மொழித் தேர்வாளர், நெறியாளர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை நெறியாளர் (இருப்பின்) ஆகியோருக்கு அளிக்கப்பெறும்.

21.2. வாய்மொழித் தேர்வுக் குழு, ஆய்வு நெறியாளர், இணை நெறியாளர் (இருப்பின்) ஆய்வேட்டை மதிப்பீடு செய்த இந்திய தேர்வாளர் (புறத் தேர்வாளர்) மற்றும் துறைத் தலைவர் (அகநிலை உறுப்பினர்) ஆகியவர்களைக் கொண்டிருக்கும்.

ஆய்வு நெறியாளர் வாய்மொழித் தேர்வு மற்றும் குழுவின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார். ஆய்வு நெறியாளர் வாய்மொழித் தேர்வின் முடிவுகளை ஒருங்கிணைத்துத் துறைத்தலைவர், புலத்தலைவர் வழி கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநருக்குத் தெரிவிப்பார்.

21.3. ஆய்வேட்டை மதிப்பீடு செய்த இந்திய தேர்வாளர் (புறநிலை) வாய்மொழித் தேர்வை நடத்த இயலவில்லை அல்லது அவரால் வர இயலவில்லை என்றால் சமர்ப்பிக்கப்பட்ட இந்திய தேர்வாளர்கள் குழுவிலிருந்து ஒருவர் வாய்மொழித் தேர்வை நடத்த துணைவேந்தரால் நியமிக்கப்பட வேண்டும்.

21.4. வாய்மொழித் தேர்வுத் தேர்வாளர் அறிக்கையைப் பெற்ற நாளிலிருந்து, **இரண்டு மாதங்களுக்குள் நடத்தப்பட வேண்டும்.**

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில் வாய்மொழித் தேர்வை நடத்தக் கூடாது. வாய்மொழித் தேர்வுப் புறத்தேர்வாளர் மற்றும் துறைத் தலைவர் ஆலோசனையின்படி வாய்மொழித் தேர்வுக்குக் குறைந்த அளவு 15 நாட்களுக்கு முன்பு உறுதி செய்யப்பட்டு அதை கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநருக்குத் தெரிவிக்க வேண்டும்.

வாய்மொழித் தேர்வுக்கான சுற்றறிக்கைகள் கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநர் (DARE) பிற துறைகள், பிற நிறுவனங்கள், பேராசிரியர்கள், மற்றும் ஆய்வாளர்கள் ஆகியவர்களுக்கு வாய்மொழித் தேர்விற்குக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்பாகத் தெரிவிக்க வேண்டும்.

வாய்மொழித்தேர்வு குழு உறுப்பினர்களைத் தவிர குறைந்த அளவாக 25 பங்கேற்பாளர்கள் வாய்மொழித் தேர்வின் போது இருத்தல் அவசியம்.

21.5. ஆய்வேட்டின் ஒரு நகல் துறை நூலகத்தில் வாய்மொழித் தேர்வு நடைபெறுவதற்குக் குறைந்த அளவாக 15 நாட்களுக்கு முன், ஆய்வேட்டைப் படிக்க ஆர்வமுள்ளவர்

பயன்பாட்டிற்காக வைக்கப்படும். இதனுடன், வாசித்தோர் கையொப்பமிடும் படிவமும் வைக்கப்பெறும்.

21.6 ஆய்வேட்டின் பாடப் பொருள் பற்றிய ஆய்வாளரின் தெளிந்த அறிவு மற்றும் பொதுவாக ஆய்வுத் துறையில் ஆய்வாளரின் புலமையைத், திறனைப் பரிசோதிப்பதே வாய்மொழித் தேர்வின் நோக்கமாகும்.

ஆய்வாளர் பார்வையாளருக்கு முன்பாக ஒரு சுருக்கமான விளக்கக்காட்சியை வழங்கி, தேர்வாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களுக்குப் பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்.

21.7 வாய்மொழித் தேர்வு, ஒரு தேர்வு நடத்தையின் பொருத்தமான முறைகளைக் கடைப்பிடித்துக் கவனத்துடன் நடத்தப்பெற வேண்டும். மேலும் அதனை வெறும் சம்பிரதாயமாகக் கருதும் எந்த முயற்சியும் இருக்கக் கூடாது. ஆய்வாளர் மற்றும் ஆய்வு நெறியாளர் புறநிலைத் தேர்வாளரைத் தமது செயல்பாட்டால் பாதிப்பதாகக் கருதப்படும் எந்தவொரு செயலிலும் ஈடுபடக்கூடாது. ஆடம்பரமான விழாக்கள் விருந்துகள் ஆகியவற்றையும் ஏற்பாடு செய்யக்கூடாது.

21.8 வாய்மொழித் தேர்வு அறிக்கை ஆய்வாளரின் செயல்திறன், இந்திய மற்றும் வெளிநாட்டுத் தேர்வாளர்கள் தங்கள் அறிக்கையில் எழுப்பிய கேள்விகளுக்கும், வாய்மொழித் தேர்வுக் குழுவும், பார்வையாளர்களும் எழுப்பிய கேள்விகளுக்கும் ஆய்வாளர் அளித்த பதில்களும் அடங்கிய ஒரு முழுமையான அறிக்கையாக இருக்க வேண்டும். வாய்மொழித் தேர்வின் நடவடிக்கைகளின் பட்டியல், அவர்களின் பங்கேற்பாளர்களின் பட்டியல், அவர்களின் கையொப்பம், பதவி மற்றும் முகவரியுடன் மற்றும் சரிபார்ப்புப் பட்டியலுடன், வாய்மொழித் தேர்வு முடிந்தவுடனே அதே நாளில் இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

21.9. பொது வாய்மொழித் தேர்வில் வெற்றி பெற்ற ஆய்வாளருக்கு வாய்மொழித் தேர்வுக்குழு முனைவர் பட்டம் வழங்கப் பரிந்துரைக்கும்.

21.10. ஓர் ஆய்வாளர், தனது வாய்மொழித் தேர்வில் வெற்றிபெறத் தவறினால், அவருக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு மீண்டும் வாய்மொழித் தேர்வை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

21.11. வாய்மொழித் தேர்வு மன்றம் பின்வருவனவற்றில் ஒன்றைப் பரிந்துரைக்கும்:

i. பட்டம் வழங்கப்படும் எனவும்

ii. ஆய்வாளர் இரண்டாவது வாய்மொழித் தேர்வில் மறுபரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார் எனவும் (இது 3 மாத காலத்திற்குப் பிறகு செய்யப்படும்),

iii. பட்டம் வழங்கப்படாது மற்றும் ஆய்வேடு நிராகரிக்கப்பட்டது எனவும்

21.12. தொகுக்கப்பட்ட பரிந்துரை ஆட்சிக் குழுவின் முன் ஒப்புதலுக்காக வாய்மொழித் தேர்வு நடந்த பின்னர் வைக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நேரிலோ அல்லது ஆளில்லா நிலையிலோ பட்டமளிப்பு விழாவில் முனைவர் பட்டம் வழங்கப்படும்.

## 22.0 முனைவர் பட்டம் வழங்குதல்

22.1. ஆட்சிக் குழுவால், ஆய்வேடு ஏற்பளிக்கப்பட்ட பிறகு, பட்டமளிப்பு விழாவில் பட்டம் வழங்குவதற்கு முன், வாய்மொழித் தேர்வு முடித்ததற்கான சான்றிதழ் மற்றும் ஆய்வாளரின் எழுத்துப்பூர்வ கோரிக்கையின் பேரில் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிமுறைகள் 2016 விதிகளின்படிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது எனத் தற்காலிகச் சான்றிதழ் வழங்கப்படும்.

22.2. முனைவர் பட்டச் சான்றிதழில் ஆய்வாளரின் பெயர், ஆய்வாளரின் புகைப்படம் மற்றும் ஆய்வேட்டின் தலைப்புடன், அவரது துறையின் பெயரும் இடம் பெறும். மேலும் பட்டச் சான்றிதழில், “பட்டம் பல்கலைக்கழக நல்கைக்குழுவின் ஒழுங்குமுறைகள், 2016-க்கு இணங்க வழங்கப்பட்டது” எனவும் இடம்பெறும்.

22.3. வேறு துறையுடன் இணைந்த ஆய்விற்கு **வழங்கப்படும் முனைவர் பட்டச் சான்றிதழில் ஆய்வாளரின் முதுகலைப் பட்டமும் மற்றும் அவர் ஆய்வு நடத்திய துறை(கள்) பெயரும் இடம்பெற்றிருக்க வேண்டும்.**

## 23.0 பதிவு இரத்து செய்யப்படும் நிலை

23.1. தனது ஆய்வேட்டை மேல் எல்லைக் காலத்திற்குள் (நீட்டிப்புக் காலம் உட்பட) சமர்ப்பிக்காத ஆய்வாளரின் பதிவு, உட்பிரிவு 13.1 மற்றும் 13.2-இல் உள்ளபடித் தானாகவே இரத்துச் செய்யப்படும்.

### 23.2 பதிவு இரத்து செய்யப்படுவதற்குரிய காரணங்கள்

i. ஆய்வாளர் ஆண்டுக் கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் செலுத்தாமை,

ii. இரண்டு முறை தொடர்ந்து ஆய்வு முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை அல்லது ஆய்வு முன்னேற்றம் திருப்திகரமாக இல்லாமை,

iii. ஆய்வாளர் தற்காலிகப் பதிவை முனைவர் பட்டப்படிப்பிற்குப் பதிவு செய்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் உறுதிப்படுத்தத் தவறுதல்,

iv. கல்விநிலை ஆய்வு இயக்கக இயக்குநரிடமிருந்து பட்டப்படிப்பு இடைவேளைக்கு அனுமதி பெறத் தவறுதல்,

v. குறிப்பிட்ட காலத்திற்குள் பயிற்சிப் பணியை முடிக்கத் தவறுதல்,

vi. பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஆய்வாளர் தவறாக நடந்து கொள்ளல் மற்றும் பல்கலைக்கழகத்தின் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு எதிராக செயல்படல்,

vii. ஆய்வாளர் முனைவர் பட்டப்படிப்பிலிருந்து விலக விரும்பி, அவரது பதிவை இரத்துச் செய்யமாறு கோருதல்,

viii. கால நீட்டிப்பு (ஆறு ஆண்டுகளுக்கு மேல்) 13.2-இல் உள்ளதைப் போல் அனுமதி பெறாமை,

ix. ஆய்வேட்டை ஆய்வுச் சுருக்கம் ஏற்பளிக்கப்பட்ட நாளிலிருந்து பதினெட்டு மாதங்களுக்கு மேல், முன் அனுமதியின்றி சமர்ப்பித்தல்,

x. தேர்வாளரின் பரிந்துரைகளை உள்ளடக்கிய (திருத்தப்பட்ட ஆய்வேட்டை) ஆறு மாதங்களுக்கு மேல் தாமதாமாகச் சமர்ப்பித்தல்.

xi. ஆய்வுக் கட்டுரை, ஆய்வுச் சுருக்கம், ஆய்வேட்டில் உள்ள கருத்துக் களவு, கருத்துத் களவு (தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைப்படி),

xi. ஆய்வாளர், நெறியாளர், இணை நெறியாளர் எந்த வகையிலாவது யாரேனும் தேர்வாளர்களுடன் தொடர்பு கொள்ளுதல்,

xii. முனைவர் பட்டப்படிப்பின் விதிகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றாமை.

## 24.0 ஆய்வேட்டை வெளியிடுதல்

24.1 ஆய்வேடு பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டால் அது பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமானதாகும்.

24.2 ஆய்வேட்டின் இறுதி முடிவுகளை நூலாக வெளியிடும் போது ஆட்சிக்குழுவின் ஒப்புதலோடு, ஆய்வாளர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்து (ஆய்வு நெறியாளரின் மூலமாக) அனுமதி பெற வேண்டும்.

24.3 ஆய்வு முடிவுகளின் இரண்டு நகல்கள், கல்விநிலை ஆய்வு இயக்கக அலுவலகத்திற்குச் (DARE) சமர்ப்பிக்க வேண்டும்.

## 25.0 ஆராய்ச்சி அறிக்கை சம்பந்தமான மற்றவரின் கூற்றுகளைப் பயன்படுத்துதல் (ஆய்வுக் களவு) தொடர்பாக

25.1 முனைவர்பட்ட ஆய்வாளர் மற்றவர்களின் ஆய்வுக் குறிப்புகள், கூற்றுகள் முடிவுகள், ஆய்வாளர் தனது பெயரில் வெளியிட்டால், கல்விநிலை ஆய்வு இயக்ககத்தின் மூலம் விசாரணைக்கு அழைக்கப்படுவர். விசாரணையில் உண்மையென்று தெரியவரும் போது இயக்ககத்தின் மூலம் அதை திருத்த வலியுறுத்தப்படுவார். அந்தக் கருத்தை நீக்கிய பிறகோ அல்லது திருத்திய பிறகோ ஆய்வேட்டைச் சமர்ப்பிக்க வலியுறுத்தப்படுவார்.

அவர் மறுக்கும் நிலையில் ஆய்வேடானது ஏற்றுக்கொள்ளப்படாது, அது மட்டுமல்லாமல் அவர் இந்தப் பல்கலைக்கழகத்தில் இறுதிவரை, மறுமுறை ஆய்வு படிப்பிற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

25.2. ஆய்வுக் களவு சம்பந்தமாக ஆய்வு நெறியாளரின் பங்கு இருப்பதாகக் கருதப்பட்டால் அவரது ஏற்பளிப்பும் இரத்துச் செய்யப்படும். (தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைப்படி).

25.3. ஆய்வு நெரியாளரின் சம்பந்தமில்லாமல் சுயமாக ஆய்வாளர் தகவல் களவில் சம்மந்தப்பட்டிருந்தால், துணைவேந்தர் அமைக்கும் விசாரணைக்குழுவின் முன் தோன்றிய பின்னர், நிரூபிக்கப்பட்டால் ஆய்வாளருக்கு ரூபாய் 50,000/- தண்டத்தொகையும், ஆய்வு நெறியாளருக்கு எச்சரிக்கையும் செய்யப்படும். மேலும் ஆய்வுக் குழுவின் முடிவு வெளியிடும் போது சம்மந்தப்பட்ட ஆய்வின் புதிய வெளியீட்டைக் குறிப்பிட்ட இதழில் வெளியிட்டிருக்க வேண்டும்.

மேலும் ஆய்வு நெறியாளரின் உதவியுடன் களவு செய்திருப்பது நிரூபிக்கப்பட்டால், ஆய்வு நெறியாளரின் ஏற்பளிப்பு 5 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்படும்.

25.4 ஆய்வேடு சமர்ப்பித்த பின்னர் தகவல் களவில் ஈடுபட்டிருப்பது தெரிய வந்தால் ஆய்வாளரிடமிருந்து பட்டம் திரும்பப் பெறப்படும்.

## 26.0 ஆய்வேட்டின் நகல்களை நூலகத்தில் காத்தல்

ஆய்வேடானது வெளிமதீப்பீட்டாளர் மதிப்பீடு செய்த பிறகு ஆய்வேடு சம்பந்தப்பட்ட கல்லூரி/நிறுவன நூலகத்திலும், பல்கலைக்கழக நூலகத்திலும், துறை நூலகத்திலும் மென்நகலாகவும் வன்நகலாகவும் வைக்கப்பட வேண்டும்.

## 27.0. ஆய்வு நெறிமுறைகள் தொடர்பான விதிமுறைகள்

27.1. ஆய்வு சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களும், ஆய்வுக்குப் பயன்படுத்தப்படும் உயிரினங்கள் (பரிசோதனை விலங்குகள்) அனைத்தும் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நெறிமுறைப்படி உருவாக்கப்பட்ட விதிமுறைக் குழுவின் அனுமதியுடன் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழக விதிமுறைக் குழுவின் அனுமதியின்றி மேற்கூறிய உயிரினங்களைப் பயன்படுத்தக் கூடாது.

27.2 மேற்கூறிய உயிரினங்கள் பயன்படுத்துவதும், பல்கலைக்கழக அறக்குழுவின் ஒப்புதல் பெற வேண்டியதும் ஆய்வு நெறியாளர், ஆய்வாளர் ஆகிய இருவரின் பொறுப்புக்கு உட்பட்டது.

27.3 மனித உளவியல், மானுடவியல், கலை, சமூக அறிவியல் சார்ந்த ஆய்வு கோருதல், உளவியல் ஆய்வு நன்னெறி மற்றும் கலை மற்றும் சமூக அறிவியல் ஆய்வு குழு என இரண்டு குழுக்கள் உருவாக்கப்பெறும் இந்த இரண்டு அமைப்புகளும் ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுவோரின் மனித மாண்பு, மனித உரிமை, உடல்நலம், பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். சம்மந்தப்பட்ட அனைத்துச் சிக்கலின் விதிமுறைகளை நன்கு ஆராய்ந்து முடிவெடுக்கப்பட வேண்டும்.

27.4. **தாவரங்கள் சம்மந்தப்பட்ட ஆய்வுக்கான நடைமுறைகள்:**

அனைத்து விதமான தாவரங்கள் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் தொழில்நுட்பத்துறை வழிகாட்டுதலுடன் மேற்கொள்ள வேண்டும்.

27.5 **களப்பணி வழிகாட்டு முறைகள்:**

காடு, வனம், மீன்பண்னை, மீன்வளர்ப்பு, வனவிலங்கு, தொல்லியல் சம்மந்தப்பட்ட ஆய்வுகளுக்கு அந்தந்த துறையின் முறையான அனுமதி பெற்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

27.6. **ஆய்வகத்தில் விலங்குகளை வைத்து சோதனை செய்தல் - வழிகாட்டு நெறிமுறைகள்**

ஆய்வகத்தில் விலங்குகளை வைத்துச் சோதனை செய்யும் போது பல்கலைக்கழகத்தின் ஆய்வகச் சோதனை நெறிமுறைக் குழுவிடம் முறையாக அனுமதி பெற வேண்டும்.

- ஆய்வில் சோதனைக்கு விலங்குகளைப் பயன்படுத்தினால் ஆய்வின் ஒப்புதல் நகலைக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி அனுமதி பெற வேண்டும்.
- விலங்குகளைச் சோதனைச் செய்யும் போது (ஆய்வுக்காக) பல்கலைக்கழகத்தால் வரையறுக்கப்பட்ட விதிகளின் படியும், ஆய்விக்குழுவின் அனுமதியுடனும் கால்நடை மருத்துவரின் அனுமதியுடன் நடத்தப்பட வேண்டும்.
- ஆய்வாளர் விலங்கினங்களைச் சோதனை செய்யும்போது (மிருகவதைத் தடை சட்டம் (1960) மற்றும் இனவிருத்தி செய்யும் போது உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

27.7. **உயிரினப் பாதுகாப்பு நடைமுறைகள்**

உயிரினப் பாதுகாப்பு முறையானது விலங்கினங்களை ஏற்றுமதி, இறக்குமதி, சோதனைச் சாவடியில் வைத்திருத்தல் போன்ற நடைமுறைகளைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

மரபணு மாற்றம் செய்வது மரபணுத் தொழில்நுட்பம் சம்பந்தமாக ஆய்வு செய்யும்போது உயிர்த்தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளை உயிர்த்தொழில் நுட்பத்துறையால் வகுக்கப்பட்டது கடைபிடிக்க வேண்டும்.

### 27.8. மனிதர்களைச் சோதனைக்குப் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள்

மனிதர்களைச் சோதனைக்காகப் பயன்படுத்தும்போது பல்கலைக்கழகத்தால் அமைக்கப்பட்ட மனித ஆராய்ச்சி வரையறைக் குழுவின் அனுமதி பெற்று, இக்குழு தேர்வு செய்தவர்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மனித மாதிரி, மனித திரவங்கள் இவைகளை ஆய்வுகளுக்குப் பயன்படுத்தும்போது, உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். (இந்திய உயிரி மருத்துவக் குழு) வளர்ந்து வருகின்ற (அ) புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உயிர் மருத்துவ நிலையம், மருந்து உற்பத்தி நிறுவனம் சம்பந்தப்பட்டவை மனித வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் போது ஆராய்ச்சியாளர் இவைகளைப் பற்றி முழுமையாகத் தெரிந்த பின்னரே மேற்கொள்ள வேண்டும்.

27.9 ஆய்வாளர் பல்கலைக்கழகம் தவிர்த்து வேறு ஒரு நிறுவனத்துடன் சேர்ந்து ஆய்வில் ஈடுபடும்போது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நெறிமுறைகள் ஆய்வு முன்மொழிவில் இணைக்கப்பட வேண்டும்.

## 28.0 ஆய்வு நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆய்வையும் அறிவியல் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் ஆய்வு நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் செயல்படுகிறது. திட்டமிடப்பட்ட, பாதுகாக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட, மேற்பார்வையுடன் செயல்பட வேண்டும்.

இதற்கு நன்கு பயிற்சி பெற்ற, ஆய்வு வழிகாட்டுதலுடன் செயல்பட வேண்டும். அனைத்து ஆய்வாளர்களும், ஆய்வு நெறியாளரும் ஆய்வு நெறிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

### 28.1. அறிவியல் ஒருமைப்பாடு

அனைத்து ஆய்வாளர்கள் அதிக அளவு நம்பகத்தன்மை மற்றும் ஆய்வு நன்னெறிகளைக் கடைபிடிக்க வேண்டும். ஆய்வுக்காக நிதி கோருதல், ஆய்வை வடிவமைத்தல், தரவுகள் நெறிப்படுத்துதல், விளக்குதல், முடிவு எழுதுதல் இவைகளின் நன்னெறிகளை அவசியம் கடைபிடிக்க வேண்டும்.

### 28.2. நன்னெறிகள்

அனைத்து ஆய்வாளர்களும் மனித மாதிரிகள், விலங்கின மாதிரிகளைப் பயன்படுத்தும் போது, அவற்றின் விவரங்களை வெளியிடக் கூடாது. அனைத்து ஆய்வாளர்களும் ஏற்கப்பட்டுள்ள வரைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

## 28.3. கருத்து வேறுபாடு

ஆய்வுக் கருத்துகளில் வேறுபட்ட அல்லது மாறுபட்ட கருத்தை/முடிவுகளைப் பெறும் போது உள்நோக்கத்தோடு வேறு கருத்துகளைத் திணிக்கக் கூடாது. ஆய்வு முடிவுகளை அறிவிக்கும் போது எவ்வித அழுத்தங்களுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. முடிவை மாற்றி எழுதக்கூடாது. வேலைபெறும் நோக்கத்தோடு கலந்தாலோசித்தலோ, கையூட்டுப் பெற்றுக் கொண்டு உண்மைக்குப் புறம்பான முடிவை அறிவிக்கவோ கூடாது.

## 28.4. பாதுகாப்பு

ஆய்வாளர் ஆய்வின் போது ஏற்படக் கூடிய அசம்பாவிதங்களைக் கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஆபத்தான, நச்சுத்தன்மை வாய்ந்த பொருள்களைக் கையாளுதல், வைத்திருத்தல் தடுப்பு-மருந்துகளைப் பயன்படுத்தல், அமிலம் மற்றும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் திரவங்களைப் பயன்படுத்தல் தொடர்பாகத் தெளிவான அறிவு வேண்டும்.

## 28.5. பொருளாதாரம்

அனைத்து ஆய்வாளர்களும் ஆய்வு சம்மந்தமான நிதி நிலைமை, உட்கட்டமைப்பு உபகரணங்கள், வழிகள், தளவாடப் பொருள்களை ஏற்படுத்திக் கொள்ள ஏதுவாக வழிவகைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தொடர்ச்சியாக ஆய்வு ஆலோசனைக்குழுக் கூட்டம் நடத்தி முனைவர்பட்ட மாணவர்களைக் கண்காணித்தல் வேண்டும். (ஆய்வு நெறியாளரின் ஒப்புதலுடன்) அனைத்துத் தரவுகளின் இரகசியம் பாதுகாத்தல் மற்றும் அறிவுசார் உரிமை விதிமுறைகளுக்கு உட்பட்டது.

### 28.6.1 தரவுகளை ஆவணப்படுத்துதல்

அனைத்து வகையான தகவல்களையும் முறையாகப் பதிவு செய்ய வேண்டும். அவற்றைப் பிறர் ஆய்வுக்குப் படிப்பதற்கு ஏதுவாக ஆய்வு நெறியாளர் பாதுகாக்க வேண்டும்.

28.6.2 அனைத்துத் தரவுகளும், சோதனைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

### 28.6.3 வெளியிடுதல்

தமிழ்ப் பல்கலைக்கழகம் அனைத்து ஆய்வாளர்களும் தங்களது ஆய்வேட்டை வெளியிட ஊக்குவிக்கிறது. தரமான ஆய்வுகளைத் தரமான peer reviewed ஆய்வு இதழ்களில் வெளியிட வேண்டும்.

ஆய்வு முடிவுகளை வெளியிடும்போது (IP) அறிவுசார் சொத்துரிமை பெற்று வெளியிடுதல் வேண்டும். அதே வேளையில் தகவல்களை மிகவும் எச்சரிக்கையாகக் கையாள வேண்டும்.

## 29.0 தவறான நடவடிக்கை

தமிழ்ப் பல்கலைக்கழகம் கொள்கை அடிப்படையில் ஆய்வின் எந்தத் தவறான நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளாது. உண்மைக்குப் புறம்பான ஆய்வு முடிவுகளை வெளியிடக் கூடாது.

29.1. புனைதல், பொய்மைப்படுத்துதல் மற்றும் தகவல் களவு, ஆய்வின் தவறான நடத்தைகளாகும்.

29.2 ஆய்வு முடிவுகளைப் புனைதல் கூடாது. அதாவது திரித்து எழுதுதல், சேர்த்தோ, குறைத்தோ எழுதுதல் கூடாது. சான்றுகளின் அடிப்படையிலே முடிவுகளை உருவாக்க வேண்டும்.

29.2.1. ஆய்வுப் பொருண்மைகளைப் பொய்மைப்படுத்துதல் கூடாது. தரவுகளை ஒதுக்குதல், நீக்குதல், மறைத்தல் கூடாது.

29.2.2 தகவல் களவு: மற்றவரின் கூற்றுகளையோ அல்லது கருத்துகளையோ அல்லது கற்பனைகளையோ, அறிவுசார் பொருண்மைகளையோ தன் பெயரிட்டுப் பயன்படுத்தக் கூடாது.

29.2.3 கூற்றுகளைக் குறிப்பிடும்போது முறையான ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

29.2.4 அனுமதியில்லாமல் கூற்றுகளை மேற்கோள் காட்டுதல்

மற்ற ஆய்வாளரின் முடிவுகளை மேற்கோள் காட்டும் போது அந்த ஆய்வாளரின் அனுமதி கட்டாயம் தேவை. மேலும் அந்த ஆய்வாளர் மறுத்தால் அவரின் கூற்றுகளைப் பயன்படுத்தக் கூடாது.

29.2.5 ஆய்வில் நெறிமுறைகளை மீறுதல் (மனிதர், விலங்குகள் பயன்படுத்தும்போது) புகைப்படங்கள், பிற சான்றுகளை இணையத்திலிருந்து எடுக்கும் போது முறையாக எழுத்துப்பூர்வ அனுமதி பெற வேண்டும்.

29.2.6 ஆய்வு முடிவுகளை மாற்றி வெளியிடுதல் கூடாது

29.2.7 ஆய்வு முடிவுகள் தவறாக இருப்பின் அதை மறைத்தல் கூடாது.

29.2.8 ஆய்வு சம்மந்தப்பட்ட பொருட்களை உள்நோக்கத்தோடு பயன்படுத்துதல், வெளியிடுதல், மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துதல் அனைத்தும் ஆய்வு நெறி முறைகளுக்கு எதிரானது.

## 30.0 தவறான ஆய்வு நடவடிக்கைகளைக் கண்டுபிடித்தல்

தவறான ஆய்வு பற்றிய குற்றச்சாட்டு எழும்போது பல்கலைக்கழகம் குழு அமைத்து அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுக்கும்.

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் இந்த குழுவில் இடம் பெறுவார்கள்:

| | | |
|---|---|---|
| கல்வி நிலை ஆய்வு இயக்கக இயக்குநர் | - | ஒருங்கிணைப்பாளர் |
| புல முதன்மையர் | - | உறுப்பினர் |
| துறைத்தலைவர் அல்லது மூத்த பேராசிரியர் | - | உறுப்பினர் |
| தொடர்புடைய புலத்தின் வேறு ஒரு துறையின் தலைவர் (துணைவேந்தர் நியமனம்) | - | உறுப்பினர் |
| ஒரு பெண் ஆய்வு நெறியாளர் | - | உறுப்பினர் |

30.1 இந்த குழுவின் செயல்பாடுகள் மிகவும் இரகசியமாக நடத்தப்படும்.

30.2 விசாரணையில் தவறான நடவடிக்கைகள் ஏதும் இல்லையெனில், சம்மந்தப்பட்ட குற்றச்சாட்டு நீக்கப்படும்.

30.3 குற்றசாட்டில் உண்மை இருப்பின் ஆய்வாளரும் ஆய்வு நெறியாளரும் முறையாக விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்படும்.

30.4 ஆய்வாளரோ நெறியாளரோ தரவுகள், பொருட்கள், வெளியீடு சம்மந்தமாக அவர்கள் தரப்பு வாதத்தைத் தெரிவிக்கக் குழு அவகாசம் அளிக்கும்.

30.5 இந்த விசாரணைக்குழு 30 நாட்களுக்குள் தனது பரிந்துரையை அறிக்கையாகச் சமர்ப்பிக்கும்.

30.6 தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆய்வு சரியாக, முறையாக நல்லமுறையில் நடத்துவதற்குத் துணைபுரியும். ஆய்வாளரும், நெறியாளரும் எவ்வித அச்சமின்றி நல்ல நோக்கத்துடன் தங்களது ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

30.7 முனைவர்பட்ட ஆய்வாளர், ஆய்வு நெறியாளர் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டது நிரூபிக்கப்பட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

# இயல் - III

## விதிமுறைகள் மாற்றம் செய்தல்

## 31.0. சட்ட விதிகளில் திருத்தங்கள்

இந்த நெறிமுறைகள் தேவைப்படும் போது ஆட்சிக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாற்றங்கள் அல்லது திருத்தங்களுக்கு உட்பட்டது.

## 32.0 சட்ட விதிகளின் பொருள் விளக்கம்

சட்ட விதிகளில் ஏதேனும் சர்ச்சை எழுந்தால் ஆட்சிக் குழுவின் முடிவே இறுதியானது.